அதிகாரம் 3

# கிறிஸ்து மோசேயை விட மேலானவர்

யூதர்கள் தீர்க்கதரிசிகளிலும் (1:1), தேவதூதர்களால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திலும் (2:2) பெருமைபாராட்டினார்கள். அவைகள் மாபெரும் சட்டங்களைத் தந்த மோசேயால் கொடுக்கப்பட்டவையென அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்களுடைய விசுவாச அமைப்பில் மோசேவிற்கு அடுத்த நிலையில் மிகவும் முக்கிய அலுவலர்களாக பிரதான ஆசாரியர்கள் இருந்தனர்.

இந்த நிருபத்தின் நோக்கங்களில் ஒன்று என்னவென்றால் யூத பரிசுத்தவான்கள் யூத மதத்திற்கு திரும்புதலிலிருந்து தடுப்பதற்கானதாக இருந்தது. ஏனெனில் தீர்க்கதரிசிகள், நியாயப்பிரமாணம், மோசே, மற்றும் முதல் பிரதான ஆசாரியனாகிய ஆரோன் ஆகியோரை குறித்து ஒரு உயர்வான கண்ணோட்டத்தை அவர்கள் கொண்டிருந்தனர். இதன் விளைவாகவே எபிரெயர் 3:1-4:13 ஆகிய வசனங்கள் மோசேயை விட கிறிஸ்துவின் உயர்வான நிலையை எடுத்துரைக்கிறது.

## அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாகிய கிறிஸ்து (3:1-6)

**3:1-6**

**[1]இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.**
**[2]மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். [3]வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். [4]ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும்**

**உண்டுபண்ணினவர் தேவன். 5சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். 6கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்.**

வசனங்கள் 1 மற்றும் 2 ஆகிய வசனங்கள் இந்த ஆசிரியருடைய விவாத ஆய்வின் மையப் பொருளை வெளிப்படுத்தும் மற்றொரு அறிக்கையாக இருக்கிறது. உண்மையாகவே மோசே ஒரு தீர்க்கதரிசியாகவும், பரிந்து பேசுகிறவராகவும் இருந்தார். வேறொரு தீர்க்கதரிசி தன்னுடைய இடத்தை தனக்கு பதிலாக பிடிப்பாரென்றும் அவர் முன்னுரைத்தார் (உபா. 18:15-18). வசனம் 2:17 அறிமுகப்படுத்துவதுப் போன்று இந்த புதிய "மோசே" மற்றும் புதிய "அப்போஸ்தலர் மற்றும் பிரதான ஆசாரியர்" என்பது "வரப்போகிற ஒரு புதியவற்றை" அமைக்கப் பெற்றிருக்கிறது. பழைய உடன்படிக்கையின் கீழ் மோசே மற்றும் ஆரோன் ஆகிய இருவரும் தனித்தனியாக பெற்றிருந்த பங்காற்றலை புதிய உடன்படிக்கையின் கீழ் இயேசுவானவர் வெளிப்படையாகவே பெற்றிருக்கிறார்.[1]

**வசனம் 1. பரிசுத்த சகோதரரே** என்ற சொற்றொடரானது புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.[2] இதைப் போன்றே "விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு" என்று கொலோசெயர் 1:2ல் கூறப்பட்டிருந்தாலும், "பரிசுத்த சகோதரரே" என்று கூறுவது தனித்துவமானதாக இருக்கிறது. "சகோதரர்கள்" கிறிஸ்துவில் கொண்டுள்ள உறவின் அடிப்படையில் "பரிசுத்தவான்களாக" இருக்க எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் (கலா. 3:26, 27). "பரிசுத்த" மற்றும் "பரிசுத்தவான்கள்"ஆகிய வார்த்தைகள் ஒரே கிரேக்க வேர் சொல்லிலிருந்து வந்தவையாகும். ἅγιος (*ஹெகியோஸ்*) என்பது பெயர் சொல் மற்றும் ἁγιάζω (*ஹெகியாசொ*) என்பது வினைச் சொல்லாகவும் இருக்கிறது. இதன் பொருள் "பிரித்தெடுக்கப்பட்ட" தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட என்பதாகும். இதன் ஆசிரியர் பழைய ஏற்பாட்டின் "பரிசுத்த ஜாதி" என்ற கருத்திற்கு பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்ற வெளிப்படையான ஒப்புவமையை ஏற்படுத்துகிறார் (யாத். 19:6; 1 பேதுரு 2:9). "பரிசுத்த ஜாதி" என்ற ஸ்தானத்தை சுட்டும் வார்த்தையானது பழைய ஏற்பாட்டில்; எட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலில்; நாம் உபாகமம் 7:6 லும் பின்னர் இறுதியாக தானியேல் 12:7 லும் நாம் காணக்கூடும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய உண்மையான "பரிசுத்த" பிரித்தெடுக்கப்பட்ட (ἅγιοι, *ஹெகியொய்*) மக்களாக இருக்கின்றனர்.

**நாம் பரம அழைப்பின் பங்காளிகளாக இருக்கிறோம்**, நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது இப்படிப்பட்டவர்களாக மாறினோம், மேலும் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறவர்களாக" இருக்கிறோம் (பிலி. 3:14). இந்த நிகழ்விற்கு அப்பாற்பட்டு "அழைப்பு" என்ற வார்த்தையானது பவுலால் எட்டு முறையும் மற்றும் பேதுருவால் ஒரு முறையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது; இதைத் தவிர இந்த வார்த்தையை புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணமுடியாது. நம்முடைய "அழைப்பானது" பண்பில் "பரலோகத்திற்குரியதாக" இருக்கிறது. "பரம"என்ற இந்த பெயரடைச்சொல் எபிரெய நிருபத்தில் ஆறு முறை காணப்படுகிறது (6:4; 8:5; 9:23; 11:16; 12:22). நம்முடைய "அழைப்பாக" அது பயன்படுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் இது நம்மை "பரம எருசலேமிற்கு" நேராகவும் (12:22), ஆபிரகாமின் அழைப்பு அவரை வழிநடத்தினது போன்று "பரம தேசத்திற்கு" (11:16) நேராகவும் வழிநடத்துகிறது.

**இயேசு** என்னும் நாமமானது எபிரெயர் 3:1ல் இரண்டாம் முறையாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவருடைய பெயரே இதன் ஆசிரியருக்கு திறவுகோல் வார்த்தையாக இருக்கிறது; இது இந்த நிருபத்தில் பதினான்கு முறை காணப்படுகிறது. இங்கு இதனுடைய காணப்படுதலானது ஒருவேளை எபிரெயர்களுக்கு அவருடைய மனித பகுதியை வலியுறுத்துவதாக இருக்கக்கூடும், ஆக அவர்கள் அவரும் அவர்களைப் போன்ற மாம்சத்தை உடையவர் என்பதை முழுவதுமாக அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர்.

**அப்போஸ்தலர்** என்பதற்கான கிரேக்க வார்த்தை ἀπόστολος (*அப்போஸ்டொலோஸ்*) என்பதாகும், இது "அனுப்பப்பட்டவர்" என்று பொருள்படுகிறது. குறிப்பாக புதிய ஏற்பாட்டில், இது ஒரு "தேவனுடைய தூதர்களாக விசேஷமாக பணி செய்கிற உயர்ந்த மதிப்பிற்குரிய ஒரு விசுவாசிகளின் குழுவினரை"[3] குறிப்பிடுகிறது. இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் பலமுறை கூறப்பட்டிருந்தாலும், கிறிஸ்து வேறு எங்கும் "அப்போஸ்தலரென்று" அழைக்கப்படவில்லை.

வினைச் சொல்லாகிய ἀποστέλλω (*அப்போஸ்டெல்லோ*) இயேசுவிற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது, இது புதிய ஏற்பாட்டில் நூற்றிற்கும் மேற்பட்ட முறை காணப்படுகிற பொதுவான வார்த்தையாக இருக்கிறது. மத்தேயு 15:24ல் முதல் முதலில் *அப்போஸ்டெல்லொயிஸ்* என்ற வார்த்தை கிறிஸ்துவை குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மோசே மற்றும் இயேசு ஆகிய இருவரும் ஒரு விசேஷ பணிக்காக தேவனால் அனுப்பட்டவர்களாக இருக்கின்றனர் (யாத். 3:10), எனவே இருவரும் தேவனுடைய அப்போஸ்தலர்களாக[4] குறிப்பிடப்படுகின்றனர். யோவானின் சுவிசேஷத் தொகுப்பு, யோவான்

ஸ்நானகனையும் இயேசுவையும் தேவனால் "அனுப்பப்பட்டவராக" வலியுறுத்துகிறது (3:34; 5:24, 36, 37; 6:29; 10:36; 11:42; 17:3; மற்றும் 1 யோவான் 4:10 யும காண்க). கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டதுபோல அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர்களாக இருக்கின்றனர் (யோவான் 17:18; 20:21).

அப்போஸ்தலர் என்ற வார்த்தை அடிப்படையில் "செய்தியாளர்" என்று பொருள்படுகிறது. இயேசு உண்மையாகவே நமக்கு தேவனால் அனுப்பப்பட்ட செய்தியாளராக இருக்கிறார். 2 கொரிந்தியர் 8:23 லும் பிலிப்பியர் 2:25 லும் *அப்போஸ்தலோஸ்* என்ற வார்த்தை சபையின் செய்தியாளர்களைக் குறிப்பிடுகிறது. இந்த வார்த்தையின் சிந்தனையோட்டமானது ஒரு அரசாங்கத்தை பிரதிபலித்து, அதற்காக செயல்படும் அதிகாரத்தை பெற்றிருக்கும் ஒரு "தூதரை" குறிப்பிடுகிறது. இதன் மூல எண்ணோட்டம் "மிஷனெரி" என்று வார்த்தை தன்னகத்தே கொண்டுள்ளதற்கு நெருங்கியதாக இருக்கிறது - ஒரு குறிப்பிட்ட பணியோடு அனுப்பப்படுதல். கிரேக்க இலக்கியத்தில், இந்த வார்த்தையானது ஒரு கப்பற்படை போருக்கு செல்ல தெரிந்துகொள்ளப்பட்டதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது அல்லது ஒரு பொறுப்பிலுள்ள கப்பற்படை அதிகாரியை குறிப்பிடுகிறது.

புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை பன்னிருவரை குறிப்பிட முதன்மையாக பயன்படுத்தப்பட்டிருந்தாலும் (மத். 10:2-5), பர்னபாவை போன்று சபையால் தெரிந்து கொள்ளப்பட்ட செய்தியாளர்கள் அல்லது மிஷனெரிகள் ஆகியோரையும் குறிப்பிடுகிறது (அப். 14:4, 14). இந்த வார்த்தை "நியமிக்கப்பட்டிருக்கிற ஒருவர்" என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது.

அப்போஸ்தலர் 2:1-4ல் பரிசுத்த ஆவியின் வல்லமை அவர்கள் மீது அருளப்பட்டபோது பன்னிருவரை முழுமையாக நியமிப்பதானது நடந்தேறியது. இதன் காரணத்தினாலேயே அவர்கள் பரிசுத்த ஆவிக்காக காத்திருக்கும்படிக்கு கட்டளையிடப்பட்டிருந்தனர் (லூக். 24:49; அப். 1:8). பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றப் பின்னர் அவர்கள் அவருடைய அற்புத வல்லமைகளால் நிரப்பப்பட்டு பிரசங்கம் செய்வதற்கு முற்றிலும் தகுதிபெற்றவர்களாக இருந்தனர். அவர்களுடைய அதிகாரமானது நாம் வாசிப்பதுபோன்று அனனியா மற்றும் சப்பிராள் ஆகியோரின் மரணத்தின் (அப். 5:1-11) மூலம் எருசலேம் மக்கள் மீதும் சபையின் மீதும் இறுதியானதாகவும் ஈர்க்கப்பட்டதாகவும் இருந்தது. அந்த அதிர்ச்சியான சம்பவம் அப்போஸ்தலரிடம் பணத்தைக் கொண்டு செல்லும் நிகழ்வில் நடந்தது. மற்ற அற்புதங்களோடு சேர்ந்து (அப். 5:12) இந்த நிகழ்வும் மக்கள் இந்த அப்போஸ்தலர்களுடன் நெருங்கி பழகுவதற்கு வெறுப்பையும் அவர்களுடைய இருதயத்தில் பயத்தையும் உண்டுபண்ணியது. எப்படியாயினும், இந்த பயம் (5:13) சபையின் வளர்ச்சியில் குறுக்கீடு

செய்யவில்லை (5:14). அதற்கு மாறாக, அப்போஸ்தலர்கள் மீது ஒரு மனமார்ந்த மதிப்பை உண்டு பண்ணியது, அவர்களுடைய அதிகாரமானது சபை வளர்ச்சியில் ஒரு உண்மையான திறவுகோலாக இருந்தது.

இன்றைய காலத்தில் புதிய அப்போஸ்தலர்கள் இல்லை, ஏனெனில் அவர்களுடைய ஏவுதல் பெற்ற வார்த்தையிலிருந்து அதே அதிகாரத்துடன் பேசுகிறவர்கள் இன்றளவும் நம்மிடம் இருக்கிறார்கள். யோவான் 14-17ல் விளக்கப்பட்டிருக்கிறபடி பன்னிருவருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சகாயமானது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட வேண்டியதாக இருந்தது. சிலர் அந்த வாக்குத்தத்தங்கள் (சத்தியத்தை பெறும் வெளிப்பாடுகள், இயேசு போதித்த அனைத்தையும் நினைவுகூருதல், எதிர்கால நிகழ்வுகளை குறித்த அறிவைப் பெறுதல்; யோவான் 14:26; 16:13) அனைத்தும் இன்றளவும் நடைமுறையில் இருப்பதாக கூறுகின்றனர். எப்படியாயினும், இப்படிப்பட்ட வல்லமைகள் அனைத்தும் வெளிப்படையாகவே இன்றைய கிறிஸ்தவர்களுக்கு வாக்குப்பண்ணப்படவில்லை. அப்படி அவைகள் இருந்தால் வேதவாக்கியங்களோடு நாம் புதியவைகளை சேர்க்க வேண்டியதாக இருக்கும்.

இயேசுவானவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கும், அவருடைய புதிய கூடுகையாகிய சபையை ஸ்தாபிக்கும்படியாகும் அவரால் அனுப்பப்பட்ட “செய்தியாளராக” இருக்கிறார். அவர் இதை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட தம்முடைய அப்போஸ்தலர் மூலம் செய்தார். இந்த உண்மைகளின் வெளிச்சத்தில், அவர் மோசேயை விடவும் அல்லது வேறு எவரை விடவும் பெரிய அப்போஸ்தலராக இருக்கிறார்.

நம்முடைய **அறிக்கையைப்** பற்றி இதன் ஆசிரியர் பேசினார். “அறிக்கை” (ὁμολογία, *ஹொமோலொஜியா*) என்பது ஒருவேளை நிலையான விசுவாசப் பிரமாணத்தை குறிப்பிடக் கூடும். பழைய உடன்படிக்கையின் கீழ், இதன் வார்த்தை நியாயப்பிரமாணத்திற்கான நம்பகத்தன்மையை பொருள்படுத்துகிறது (யாத். 24:3; செப்துவஜிந்த்). புதிய உடன்படிக்கையின் கீழ், “பல சாட்சிகளுக்கு முன்பு” தீமோத்தேயு செய்த “நல் அறிக்கை” என்று நாம் அங்கீகரிக்கிறோம் (1 தீமோ. 6:12). இயேசு பிலாத்துவிடம் அங்கீகரித்த அந்த “அறிக்கையை” பவுல் அடையாளப்படுத்தினார் (1 தீமோ. 6:13). கர்த்தர் அந்த புறஜாதி ஆளுநர் முன்பு அவர் ஒரு இராஜா என்றும் அவருடைய ஆட்சியானது சத்தியமாகிய ஆவிக்குரிய எல்லைக்குட்பட்டிருப்பதாகவும் அறிக்கையிட்டார் (யோவான் 18:36, 37). சாட்சியிடுவதற்கு, தீமோத்தேயு செய்ய வேண்டியதெல்லாம் அறிக்கையிடுகிறவர்களின் மேல் இயேசு கர்த்தராக இருக்க வேண்டும் என்ற பிரகடனத்தின் மேல் அறிக்கை செய்ய வேண்டியதாக இருக்கிறது. சாட்சியிடுவதற்கு “நான் இயேசு

கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்" (அப். 8:37) என்ற சத்தியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இது "இயேசுவே கர்த்தர்" என்று கூறுவதைப் போன்றதாகும் (ரோமர் 10:9, 10). இப்படிப்பட்ட சொற்றொடரை நேர்மையாக செய்வதே "நல் அறிக்கையாக" இருக்கிறது. இந்த சத்தியத்தை புறந்தள்ளுதலானது கிறிஸ்துவை மறுப்பதாகும், அது அவர் நம்மை மறுப்பதில் நிறைவடையும் (மத். 10:32, 33).

1 தீமோத்தேயு 6:12 காணப்படுகிற "அறிக்கையிடுதலுக்கு" இதே வார்த்தையே காணப்படுகிறது, ஆனால் இந்த பகுதியில் குறிப்பாக சுட்டுகிற the என்ற வார்த்தை இருக்கிறது. நாம் கிறிஸ்துவை நம்முடைய கர்த்தராக ஏற்றுக் கொள்ளும்போது, அவர் நம்முடைய **பிரதான ஆசாரியராக** மாறுகிறார். கிறிஸ்துவிடம் மாறுவதே "அறிக்கையிடுதல்." ஏனெனில் ஒருவருடைய கிறிஸ்தவ நடக்கையில் அது அவசியமான முதல் படியாகும். 1 தீமோத்தேயு 6:12, 13 மற்றும் மத்தேயு 16:16-18 ஆகிய வசனங்கள் "நல் அறிக்கையிடுவதற்கான" எடுத்துக்காட்டை அளிக்கிறது. பவுல் தன்னுடைய ரோம நிருபத்தில், இரட்சிப்பைப் பெறுவதற்கு இதைப் போன்ற ஒரு அறிக்கை அவசியமென கூறுகிறார் (10:9, 10). நாம் இயேசுவை கர்த்தராகவும், தேவனுடைய குமாரனாகவும் அங்கீகரிக்க வேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை ஒருவர் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டாரென்றால், அறிக்கையிடுதல் அவசியமிருக்காது.

மத்தேயு 10:32ல் கூறப்பட்டுள்ள அறிக்கையானது ஒரு தொடர்ச்சியான செயலாக இருக்கிறது. ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்போது செய்கிற விசுவாச அறிக்கையை மட்டுமே அது குறிப்பிடவில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழ்வின் மூலம் "அறிக்கையிட்டு" தினந்தோறும் தான் ஒரு தேவனுடைய பிள்ளை என்பதை தொடர்ந்து காட்ட வேண்டும். எபிரெயர் 4:14 மற்றும் 10:23 ஆகிய வசனங்கள் கிறிஸ்துவின் முதன் முறை மற்றும் தொடர்ச்சியான கர்த்தத்துவத்தை மனதிற்கு கொண்டு வருகிறது. 2 கொரிந்தியர் 9:13 "நீங்கள் கீழ்ப்படிதலோடே அறிக்கையிட்டதை" என்று குறிப்பிடுகிறது, இது நாம் உரிமைகோருகிற விசுவாசத்தோடு இசைந்து வாழ வேண்டுமென்பதை சுட்டுகிறது. மக்கெதோனியர்கள் இப்படி செய்திருந்தனர் (2 கொரி. 8:1-5), தேவையிலுள்ளவர்களுக்கு தாராளமாக கொடுத்து இப்படி செய்யும்படிக்கு வலியுறுத்தப்படுகிறார்கள்.

**வசனம் 2.** இயேசு **உண்மையுள்ளவராக** இருந்ததாக NASB வேதாகமம் கூறுகிறது, ஆனால் மூல கிரேக்க மொழிபெயர்ப்பு இதை நிகழ்காலத்தில் குறிப்பிடுகிறது, அதாவது "இயேசு உண்மையுள்ளவராக இருக்கிறார்" என்ற பொருளை தருகிறது. "உண்மை" என்ற வார்த்தை, எபிரெயரில்; ஆறு முறை எழுதப்பட்டும், பவுலின் எழுத்துக்களில் காணப்படுகிறதுமாகிய மற்றொரு திறவுகோல் வார்த்தையாக

இருக்கிறது. யூத ரபீமார்கள் **மோசேயின்** நம்பகத்தன்மைக்கு ஆதாரமாக எண்ணாகமம் 12:7 செப்துவஜிந்த் ஐ மேற்கோளிடுகின்றனர்.[5] இஸ்ரவேலர்கள் எகிப்திற்கு திரும்ப விரும்பின போது நிகழ்ந்த பொற்கன்றுக்குட்டியின் சம்பவத்தின் போது ஆரோன் வழிமாறிப் போனபோதும் கூட மோசே உண்மையுள்ளவராக இருந்தார் (யாத். 32:1-20).

தேவனுடைய குடும்பமே இயேசுவின் **வீடாக** இருக்கிறது. மேலும் கிறிஸ்து ஆளுகை செய்கிற சபையாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது (1 தீமோ. 3:15). மோசேயோடு தொடர்புபடுத்தி "வீடானது" யூத யுகாயுகங்களைக் குறிப்பிடுகிறது. அதைக் கட்டியெழுப்ப மோசே தேவனுடைய கட்டளையைப் பின்பற்றினார்.

இந்த இரண்டு வசனங்களில் மேலாதிக்கம் செய்கிற சிந்தனை எது? நிச்சயமாக அது நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசு அவரை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார். இதன் ஒட்டு மொத்த முடிவு என்னவெனில் அவர் மோசேயை விட பெரிய அப்போஸ்தலராக இருக்கிறார்.

**வசனங்கள் 3, 4.** கிறிஸ்துவானவர் **மோசேயைப் பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்** (வசனம் 3). **வீட்டைக் கட்டுகிற ஒருவர்** வீட்டிலிருக்கிற வேலைக்காரனை விட **மேலான மதிப்புமிக்கவராக இருக்கிறார்**. மைக்கேலேஞ்சலோ (1475-1564) அவர் சிஸ்டைன் சிற்றாலயத்தின் மேல் தளத்தில் தன்னுடைய அழகான சித்திர கலைக்கு பேர் பெற்றவர், ஆனால் அவர் அதை விட மதிப்புமிக்கவர். நாகரீக வானசாஸ்திரத்தின் தந்தையான கலிலியோ அவர்கள் தன்னுடைய இந்த முடிவிற்கு வர காரணமாக இருந்த தொலைநோக்கியை விட மரியாதைக்குப் பாத்திராக இருக்கிறார்.

மோசே உறுப்பினராக இருந்த வீட்டை அவர் மரித்த 1500 வருடங்களுக்கு பின்னர் பிறந்த கிறிஸ்து எப்படி கட்டக்கூடும்? இயேசு கிறிஸ்துவின் நித்திய இயல்பிற்கு எபிரெயரில் மற்றுமொரு தெளிவான வெளிப்பாடாக இருக்கிறது. அவர் தம்முடைய பிறப்பிற்கு முன்னர் தேவனோடு சம இணையாக இருக்கும்போது இதை தம்முடைய வேலையின் ஒரு பங்காக பிதாவுடன் இணைந்து செய்தார். இந்த சத்தியமானது எபிரெயர் 1:2ல் சுட்டப்படுகிறது. மேலும் அது யோவான் 1:1-3ல் வெளிப்படையாகவே கூறப்பட்டிருக்கிறது. எபிரெயர் 13:8 "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாவராக இருக்கிறார்" என்று கூறி ஒரு பெரும் முடிவிற்கு வருகிறது.

இதன் ஆசிரியர் மோசேயை மட்டுப்படுத்தவில்லை. இந்த பெரும் முற்பிதாவின் உண்மையை அவர் ஏற்றுக் கொள்கிறார், ஆனால் இயேசு வீட்டைக் கட்டினவர், மோசே அதில் வேலைக்காரனாக இருக்கிறார் என்று காட்டினார். பழைய ஏற்பாட்டு குடும்பத்தில் மோசே ஒரு

உண்மையுள்ள ஊழியனாக இருந்தார் (எண். 12:7). ஸ்தேவான் சனகெரிப் சங்கத்திற்கான தன்னுடைய பிரசங்கத்தில் கூறினதுபோன்று, அவர் "வனாந்திரத்திலிருந்த சபையில்" இருந்தார் (அப். 7:38).

தம்முடைய வீடாகிய சபையை கட்டுகிறவராக (மத். 16:19) இயேசுவானவர் அந்த வீட்டை விடவும் அதலிருக்கிற வேறு எந்த வேலைக்காரர்களை விடவும் பெரியவராக இருக்கிறார். ஒரு சித்திரத்தை வண்ணம் பூசுகிற ஒருவர், ஒரு சித்திரத்தை வடிவம் கொடுக்கிறார், அல்லது ஒரு கட்டிடத்தை வடிவமைக்கிற ஒருவர் அந்த செய்யப்பட்ட பொருளை விட மேன்மையானவராக இருக்கிறார்.

இயேசு "வீட்டை" கட்டுகிறார் என்ற சிந்தையானது வெளிப்டையாகவே சகரியா 6:12, 13 லிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. தாவீதின் குமாரன் அவருடைய வீட்டை கட்டுவாரென்று தேவன் வாக்குப்பண்ணியிருந்தார்: "அவன் எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" (1 நாளா. 17:12). ஆக பழைய ஏற்பாட்டு வீட்டிற்கும் புதிய ஏற்பாட்டு வீட்டிற்கும் ஒற்றுமைகள் இருக்கிறது, ஏனெனில் எல்லா காலங்களிலுமுள்ள தேவனுடைய பரிசுத்தவான்கள் அந்த வீட்டில் இருக்கிறார்கள். இந்த சத்தியமானது "பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கு" எபிரெயர் 12:23ல் வலியுறுத்தப்பட்டப்படி முன்னர் வாழ்ந்திருந்த அனைவரும் இதில் இணைக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**வசனங்கள் 5, 6. மோசே உண்மையுள்ளவராக இருந்தார்**, ஆனால் அவர் வேலைக்காரனாக இருந்தார்,[6] ஆனால் **இயேசு அந்த வீட்டின் மேல் குமாரனாக இருந்தார்**, மோசே கட்டின வீடானது கிறிஸ்து கட்டின வீட்டை விட தரம் குறைந்ததாக இருக்கிறது. மோசேயினுடைய வீடு வரப்போகிற கிறிஸ்துவின் வீட்டிற்கு ஒரு நிழலாட்டமாக (மாதிரியாக) இருக்கிறது. கொலோசெயர் 2:17 மற்றும் எபிரெயர் 10:1 ஆகிய வசனங்கள் அதே எண்ணத்தையே கொண்டு வருகிறது.

மோசேயின் நியாயப்பிரமாணமானது இஸ்ரவேல் அரசாட்சின் ஆளுகை சட்டமாகவும் மத சட்டமாகவும் செயல்பட்டது. நியாயப்பிரமாணமானது தேவனற்றவர்களுக்கும் பாவிகளுக்கும் கொடுக்கப்பட்டதென்றும், இது அவர்களுடைய பாவத்தை சுட்டிக்காட்டவும், இன்னும் தாராளமான ஒரு வாழ்க்கை முறைமை மற்றும் நன்னடத்தை ஆகியவற்றின் அவசியத்தை செயல்விளக்கப்படுத்தவும் கொடுக்கப்பட்டதாக 1 தீமோத்தேயு 1:9 அறிவிக்கிறது (கலா. 3:19; ரோமர் 7:7). அது கிறிஸ்து வரும்வரை பாவத்தை தடை செய்யவும், விக்கிரக ஆராதனையை உலகளாவிய பரவுதலையும் அதன் பணியாகிய ஒழுக்க சீர்கேட்டைத் தடுக்கவும் கொடுக்கப்பட்டது (கலா. 3:19).

இதற்கு கூடுதலாக, கிறிஸ்துவின் சபையை ஒரு விதமாக அமைத்து தருவதே இதனுடைய முதன்மை வடிவமைப்பாக இருந்தது (எபி. 8:4, 5ஐ காண்க). கிறிஸ்து அவர் வீட்டின் மீது மட்டும் தலையாக அல்லாமல்,அவருடைய புதிய ஆவிக்குரிய வீட்டைக் கட்டுகிறவராகவும் இருக்கிறார் (மத். 16:18; 1 பேதுரு 2:5, 9). சபையின் ஒப்புவமையை பூரணப்படுத்த கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு கட்டளைகள் அனைத்தையும் பின்பற்றுவதில் மோசே உண்மையுள்ளவராக இருந்தார்.

**நாம் யாருடைய வீடாக இருக்கிறோம்**, நாம் கீழ்ப்படியும்போதும் மற்றும் தேவன் அவர் மக்களின் மீது கொண்டிருக்கிற விருப்பத்தின் மன நிலையை அடையும்போதும் உண்மையான "இஸ்ரவேலர்களாக" இருக்கிறோமென்று இதன் ஆசிரியர் தொடருகிறார். கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் பெற்ற ஒருவர், விசுவாசத்தினால், கிறிஸ்துவிற்குள் பங்காகவும், ஆபிரகாமின் "சந்ததியில்" ஒரு பங்காகவும் மாறுகின்றனர் என்று கலாத்தியர் 3:26-29 மற்றும் 6:16 ஆகிய வசனங்கள் காட்டுகிறது.

**நாம் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில்**, நாமே அவருடைய புதிய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களாக இருக்கிறோம். இந்த புத்திமதியானது இந்த வாசகர்களை பின்வாங்கி போகுதலிலிருந்து தடுக்கும் (3:12, 13). கிறிஸ்துவின் உலகில் தொடருவதே அவருடைய உண்மையான சீஷர்களாக இருக்க முடியும் (யோவான் 8:31). நம்முடைய நம்பிக்கையானது "திட நம்பிக்கையின்" அடிப்படையின் மீது இருக்கிறது (MSG). இப்படிப்பட்ட "நம்பிக்கையை" παρρησία (*பரெசியா*) பெற்றிருப்பதன் பொருள் சிலவற்றில் மகிமைபெறுதல் அல்லது மகிமைப்படுத்துதலாகும். பெருமை καύχημα (*கௌச்செமா*) என்ற வார்த்தை கர்த்தருக்குள் தொழுகை நிறைந்த நம்பிக்கையை பெற்றிருந்து "துணிச்சலான மகிழ்ச்சி"[7] என்று பொருள்படக்கூடும். இந்த நிருபம் எழுதப்பட்ட கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குள் அவர்கள் கொண்டிருந்த அவர்களுடைய உறுதியான நம்பிக்கையை இழந்துபோகும் ஆபத்திலிருந்தனர்.[8]

நிச்சயமாகவே, வாழ்க்கை முடிந்தப் பிறகு, வெறும் வாக்குத்தத்தத்தை மட்டுமில்லாமல் நாம் நம்முடைய விசுவாசத்தை "முடிவு பரியந்தம்" "உறுதியாக பற்றிக் கொண்டிருந்தால்" நித்திய வாழ்வின் நிஜத்தை பெற்றுக் கொள்வோம். நாம் கிறிஸ்துவில் பாதுகாப்பாக இருக்கிறோம், ஆனால் நம்முடைய கீழ்ப்படிதலான விசுவாசத்தினால் நாம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 1:4, 5).

விசுவாசமானது நம்முடைய பகுதியில் செய்யப்படும் கீழ்ப்படிதலின் செயலாக இருக்கிறதேயொழிய தேவனிடமிருந்து நேரடியாக வருகிற வரமல்ல. எபேசியர் 2:8ல் "வரம்" என்று கூறப்பட்டிருப்பது ரோமர் 6:23 உறுதிப்படுத்துவதுப்போன்று விசுவாசத்தைக் குறிப்பிடாமல்

இரட்சிப்பைக் குறிப்பிடுகிறது. வேதத்தை கவனமாக வாசிக்கிறவர்கள் KJV, NKJV மற்றும் NASB ஆகிய மொழிபெயர்ப்புகளில் எபேசியர் 2:8ல் வருகிற "இது" என்கிற வார்த்தையானது சாய்வு எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதை கவனிப்பார்கள், இது இந்த வார்த்தை மூல பிரதிகளில் இல்லை என்பதை பொருள்படுத்துகிறது. சில மொழிபெயர்ப்புகள் கிரேக்கத்தில் அனுமதிக்காத, விசுவாசத்தோடு "வரம்" என்ற உணர்வை விட்டு விடுகின்றன. விசுவாசமென்பது தேவனுடைய வெளிப்பாட்டினால் நமக்கு கிடைக்கப் பெறுகிற மறைமுகமான வரமாக இருக்கிறது (ரோமர் 10:17). அவர் நமது விசுவாசம் கொண்டு வருகிற ஒரு இரட்சிப்பின் முறையை ஏற்படுத்தியிருக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் தங்களை தாங்களே இரட்சித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று தனக்கு செவிகொடுக்கிறவர்களுக்கு பேதுரு கூறினார் (அப். 2:40; KJV). பின்னும் நம்முடைய இரட்சிப்பிற்காக பிரயாசப்பட வேண்டுமென்று பவுல் கூறினார் (பிலி. 2:12). நிச்சயமாகவே நம்முடைய இரட்சிப்பிற்கு துவக்கமளித்தலும், அதை பாதுகாத்தலும் தேவனுடைய பங்காக இருக்கிறது. நம்முடைய கீழ்ப்படிதலினால் நாம் நம்முடைய இரட்சிப்பிற்காக எதையும் சம்பாதிப்பது அல்லது தகுதிப்படுத்துவது உட்பட எதையும் செய்வது கிடையாது. இருப்பினும் விசுவாசத்தின் கிரியை அவசியமாக இருக்கிறது. விசுவாசமும் கூட நாம் செயற்படுத்த வேண்டிய தேவனால் நியமிக்கப்பட்ட "கிரியையாக" இருக்கிறது (யோவான் 6:29).

3:6-ல் கூறப்பட்டிருப்பதுபோன்று "நம்முடைய நம்பிக்கையின் பெருமையை" குறித்த முறைமையின் நிலையை நாம் உறுதியாக பிடித்துக் கொண்டிருக்கக் கூடுமா? NRSV மொழிபெயர்ப்பானது "நாம் நம்பிக்கையிலும் அந்த நம்பிக்கையை சார்ந்த பெருமையிலும் உறுதியாக இருந்தால்" என்று இப்படியாக கூறுகிறது. இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற பெயர்ச்சொல்லானது "நம்பிக்கை" "கபடற்றத் தன்மை," "துணிச்சல்," "வெளிப்படையாக இருத்தல்" மற்றும் "நம்பிக்கை" ஆகிய அர்த்தங்களை தருகிறது. நாம் இராஜ்ஜியத்தில் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு இடமேதும் இருக்கிறதா? நாம் நம்முடைய நம்பிக்கையை உறுதியாக மற்றும் விசுவாசத்தை நிச்சயமாக பற்றிக்கொண்டிருக்கிறோம் என்று அறிந்தால் இராஜ்ஜியத்தின் பணிகளுக்காக உற்சாகம் கொண்டிருப்போம். கர்த்தரில் பெருமை கொள்வதும், அவர் நமக்காக எதை செய்தார் என்பதும் நம்முடைய சொந்த நிறைவேறுதலுக்காக எந்த பெருமையும் கொள்ளாமல் இருக்கும்படிக்கு செய்யும்.

நம்முடைய நம்பிக்கையும் பெருமையும் கிறிஸ்துவில் அடங்கியிருக்கிறது. சுயமாக உருவாகிய ஆவிக்குரிய அளவுகள், ஜெபமானது தேவாலயத்தின் உப்பரிகையை விட உயரத்திற்கு

கொண்டுச் செல்ல காரணமாக இருந்ததாக கூறுகிற பரிசேய கூட்டத்தோடு நம்மை சேர்த்துவிடும் (லூக். 18:10-14). அந்த வகையான பெருமை "அழிவிற்கு முன்னானதாக இருக்கிறது" (நீதி. 16:18). இந்த நிருபத்தை பெறுகிறவர்கள் சரிவகையான நம்பிக்கையையும் பெருமையையும் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்திலிருந்தார்கள், ஏனெனில் அவர்கள் தங்கள் நம்பிக்கையில்; கொண்டிருந்த தன் நம்பிக்கையை இழந்து கொண்டிருந்தனர்.

நம்முடைய பெருமையின் அடிப்படையானது மோசேயாலும் நியாயப்பிரமாணத்தாலும் தரப்பட்டிருக்கிற வேறு எந்த காரியத்தை விடவும் சிறந்ததாக இருக்கிற நம்முடைய நம்பிக்கையிலிருக்கிறது. ஆக பெருமை கொண்ட யூதர்களாலும் ரபீமார்களாலும் வெளிப்படையாக வைக்கப்படும் மற்றொரு விமர்சனம் முடிந்த அளவிற்கு குறைக்கப்படுகிறது, ஏனெனில் இஸ்ரவேலின் நம்பிக்கை மோசேயில் அடங்கியிருக்கவில்லை. எபிரெயர் 7:18, 19ல் "மேலான நம்பிக்கை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் அது புதிய உடன்படிக்கையில் காணப்படுகிறது, "இதன் மூலமே நாம் தேவனிடம் கிட்டி சேருகிறோம்."

இயேசு உண்மையிலேயே மோசேயை விட சிறந்தவராக இருக்கிறார். அவர் பிரதான அப்போஸ்தலராகவும், பெரிய கட்டடக்காரராகவும் மற்றும் வேலைக்காரனாக அல்லாமல் குமாரனாகவும் இருக்கிறார். அவர் மோசேயை விட பெரியவராக மாத்திரமல்ல, பிரதான ஆசாரியனான ஆரோனை விடவும் பெரியவராக இருக்கிறார். இயேசு நித்திய வீட்டைக் கட்டி அதில் பிரதான ஆசாரியராக ஊழியம் செய்கிறார்!

## கிறிஸ்துவின் இளைப்பாறுதல் (3:7-4:13)

### கடின இருதயத்திற்கு எதிரான எச்சரிக்கை (3:7-19)

வசன ஆதாரம் (3:7-11)

**7ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று
அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், 8வனாந்தரத்திலே
கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள்
இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். 9அங்கே உங்கள் பிதாக்கள்
என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம்
என் கிரியைகளைக் கண்டார்கள். 10ஆதலால், நான் அந்தச் சந்ததியை
அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள
ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும்
சொல்லி; 11என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள்**

**பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.**

3:1-6 ஆகிய வசனங்களின் வெளிச்சத்தில் நாம் ஏற்கெனவே கண்டதுபோல, ஒரு இணையை வரையக் கூடும்: தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மக்களாக, நாம் இந்த வனாந்திர அலைந்து திரிதலில் முன்னேறி; வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராக செல்லும் பழைய உடன்படிக்கையின் மக்களைப் போன்றிருக்கிறோம். மோசேயை விட மேலானவராகிய கிறிஸ்து, நம்முடைய தலைவராக இருக்கிறார், மேலும் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டதை விட சிறந்ததாகிய வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்காக நாம் அவரை பின்பற்றுகிறோம்.[9] ஆக பழைய ஏற்பாட்டு மக்களுக்கான எச்சரிக்கையானது, புதிய ஏற்பாட்டு மக்களாகிய நமக்கும் சமமாக பொருந்தக் கூடியதாக இருக்கிறது.

இதன் ஆசிரியர் அவருடைய வாசகருக்கு கூறும் புத்திமதியானது இயல்பாகவே "ஆகையால்" என்ற வார்த்தையினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையானது இருமுறை காணப்படுகிறது (வசனங்கள் 7, 10), மற்றும் அது மூன்றாம் முறையாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (வசனம் 11).

**வசனம் 7. பரிசுத்த ஆவியானவர் கூறுவதுப்போன்று** என்ற சொற்றொடர் இதன் ஆசிரியர் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பிலிருந்து மேற்கோள் காட்டியிருந்தாலும், சங்கீதம் 95ஐ தேவனால் நேரடியாக ஏவப்பட்டதாக கவனத்தில் கொண்டிருந்தார் என்பதை காட்டுகிறது. மேலும், "கூறுகிறார்" என்ற வார்த்தையானது நிகழ்காலத்திலிருந்து, தேவன் முன்னர் பேசினதுப்போன்று தற்போதும் பேசிக்கொண்டிருக்கிறார் என்று குறிப்பிடுகிறது. முழு வேதாகமமும் ஏவப்பட்ட எழுத்தாளர்களால் மனிதனிடம் பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையின் தொகுப்பாக இருக்கிறது (2 பேதுரு 1:20, 21). எனவே பாவம் மற்றும் தேவ தூஷணத்திற்கு எதிராக கூறப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டின் எச்சரிப்புகள், புதிய ஏற்பாட்டில் மட்டுமே காணப்படுகிற நமக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது.

இதன் ஆசிரியர் சங்கீதம் 95:7-11 லிருந்து மேற்கோள் காட்டினார். வனாந்திரத்திலிருக்கையில் இஸ்ரவேலின் சம்பவத்திலிருந்த இரண்டு நிகழ்வுகளை இப்பகுதி ஒன்றாக இணைக்கிறது. ஒரு சங்கதியில், இஸ்ரவேலர்கள் தண்ணீர் பஞ்சத்தால் சோர்வடைந்து, மோசேவிற்கு எதிராக முறுமுறுத்தனர் (யாத். 17:1-7). அதன் பின்னர், வேவுக்காரர்களுடைய கானானை குறித்த மகிழ்ச்சியற்ற அறிக்கையானது பலரை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை உடனடியாக கைப்பற்றுவதை மறுக்க காரணமாக அமைந்தது (எண். 13:25-14:4). இரண்டு நிகழ்வுகளும் இஸ்ரவேலரின் தேவன் மேலிருந்த நம்பிக்கை குறைவை காட்டுகிறது. தேவனுடைய மக்களாக உரிமை

கோருவது ஒரு புறமிருந்தாலும், அவர் எதை சிறந்ததாகக் கருதுகிறாரோ அதை நமக்கு கொடுப்பதற்கு நம்புவதும் மற்றொரு புறம் இருக்கிறது.

**வசனங்கள் 8-10.** தேவன் **கோபமடைந்தார்**, ஆனால் அதை விட அதிகமாக துக்கமடைந்தார். அவர் உண்மையாகவே அந்த தலைமுறையின் "மேல் சினம் கொண்டிருந்தார்"![10] ரேமண்ட் பிரவுன் அவர்களின் கூற்றுப்படி, தேவன் "அந்த தலைமுறையினரை வெறுத்தார்,"[11] அவர் சினம் கொள்வதில் நீதியாக இருந்தார் ஏனெனில் மக்கள் அவர்களுக்கான அவருடைய கிருபைக்கு அப்பாற்பட்டும் தொடர்ச்சியாக கீழ்ப்படியாமல் இருந்தனர். நிச்சயமாக, இன்றைக்கு **நாற்பது ஆண்டுகள்** தேவனுக்கு முரட்டாட்டமாக வாழ்கின்ற ஒருவர் தேவனை கோபமூட்டுகிறார். இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட இதே கடிந்துகொள்ளுதல் நமக்கு அவசியமாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் செய்ததுபோன்றே நாமும் தேவனை துக்கப்படுத்தக் கூடும்.

நாம் இந்த காரியத்தின் மீது கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. தேவன் எங்கேயும் நம்முடைய கடமைகளை செய்ய மற்றொரு நாளைப் பெற்றிருப்பதாக உறுதியளிக்கவில்லை, எனவே அவைகள் **இன்றே** செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. நாம் இதை சுவிசேஷத்திற்கான முதன்மை கீழ்ப்படிதலாக நடைமுறைப்படுத்துகிறோமா (மாற்கு 16:16; அப். 2:38) அல்லது உண்மைத்துவத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு அவசியமானது என்று எண்ணுகிறோமா (2 பேதுரு 1:5-11) என்றில்லாமல் இந்த சத்தியமானது உண்மையாக இருக்கிறது.

எபிரெய நிருபத்தின் முதல் வாசகர்கள் விலகுகிற கடுமையான ஆபத்தை சந்தித்தனர், மேலும் அவர்களுக்கு விசேஷமான கடிந்து கொள்ளுதல் அவசியமாக இருக்கிறது. அவர்கள் பெற்றுக்கொண்டனர் மற்றும் **உங்கள் இருதயத்தை கடினப்படுத்தாதிருங்கள் ...** என்று கூறப்பட்டனர் (வசனம் 8). நாமும் கூட நம்முடைய சுவிசேஷத்தின் கடிந்து கொள்ளுதலைப் புறக்கணித்து இருதயத்தை கடினப்படுத்தக் கூடும். தேவனுடைய வார்த்தையை வேண்டுமென்றே எதிர்த்து தங்களுடைய இருதயத்தை கடினப்படுத்துகிறவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவர்களாக இருக்கின்றனர்.

இதன் ஆசிரியர் **வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல** என்று எழுதினார் (வசனம் 8). KJV மொழிபெயர்ப்பானது "வனாந்திரத்தில் சோதனை நாளில் ஆத்திரமூட்டினதுபோல" என்று குறிப்பிடுகிறது. இந்த சித்தரிப்பானது மேரிபாவில் நடந்தவற்றை ஒப்புவமைப்படுத்துகிறது. இந்த சங்கீதமானது உண்மையில் "இன்று அவருடைய சத்தத்தைக்கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்." என்று கூறுகிறது (சங். 95:8). மேரிபாவானது

இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீர் பஞ்சத்தினால் முறுமுறுத்த இடமாக இருக்கிறது (யாத். 17:1-7). யாத்திராகமம் 17:7ல் "மேரிபா" என்ற வார்த்தையும் "மாசா" என்ற வார்த்தையும் ஒரே இடத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பெயர்களை மொழியாக்கம் செய்யும்போது, எபிரெய நிருபத்தின் ஆசிரியர் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பின் சொற்களை பின்பற்றினார். அவர் ஒருவேளை எப்போதாவது ஒரு பொழிப்புரையை பயன்படுத்தினாலும், தொடர்ந்து செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பை பயன்படுத்தினார். சங்கீதம் 95:8ன் எபிரெய வசனம் இப்படியாக பொருள்படுத்துகிறது: "வனாந்திரத்தில் மேரிபாவின் தண்ணீர்களண்டை நாட்களிலும் மாசாவின் நாட்களிலும் *கடினபடுத்தினதுப்போல* உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்த வேண்டாம்." செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பு இவ்வாறு கூறுகிறது: "வனாந்திரத்திலிருந்த *எரிச்சல் மூட்டின* நாளின்படி உங்கள் இருயதங்களை கடினப்படுத்தி *ஆத்திமூட்ட* வேண்டாம்" (வலியுறுத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றது). "ஆத்திரமூட்டுதல்" அல்லது "முரட்டாட்டம்" என்ற வார்த்தை παραπικρασμός (*பேராபிக்ரஸ்மோஸ்)* என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். இதற்கான கிரேக்க சமச்சொல் "மேரிபா"[12] என்பதாகும். இந்த இடத்தின் மற்றொரு பெயர் "கலகம்" என்று பொருள் தரும் "மாசா." இதன் கிரேக்க சமச்சொல் "பாடுகள்" (πειρασμός, *பெய்ரஸ்மோஸ்*) என்பதாகும்.

இஸ்ரவேலர்கள் தங்கள் முறுமுறுப்பினால் தேவனைப் **பரீட்சைப்** பார்த்தார்களென்று இதன் ஆசிரியர் கூறினார் (வசனம் 9). எகிப்தில் இவ்வளவு அற்புதங்களைக் கண்டபின்னரும், கன்மலையிலிருந்து அற்புத வரமாகிய நீரூற்றை கண்டபின்னரும், வனாந்திரத்தில் ஆண்டவருடைய கிருபை நிறைந்த போஷிப்பாகிய காடை மற்றும் மன்னா ஆகியவற்றை பெற்றபின்னரும், மற்றும் அக்கினி ஸ்தம்பம் மற்றும் மேக ஸ்தம்பம் ஆகியவற்றால் வழிநடத்தப்பட்டப் பின்னரும் இப்படிப்பட்ட பண்பை அவர்கள் எப்படி வெளிக்காட்டக் கூடும்? நாமும் கூட ஒருவேளை தேவனுடைய இரக்கத்தின் கிரியைகளைக் கண்டு, இன்னமும் அவருடைய பொறுமையை பரீட்சித்துப்பார்த்து கருத்து வேறுபாடு மற்றும் முரட்டாட்டம் செய்து அவரை துக்கப்படுத்தக் கூடும்.

"நாற்பது ஆண்டுகள்" (வசனம் 9) என்பது தேவன் உண்டுபண்ணின தண்டனையின் காலமாக இருந்தது. இது தேவன் வாக்குப்பண்ணின தேசத்தின் பயணத்தை தாமதப்படுத்தி இஸ்ரவேலை வலுக்கட்டாயமாக வனாந்திரத்தில் தங்க வைத்த காலமாக இருந்தது. இந்த நாற்பது ஆண்டுகள் என்ற குறிப்பில் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் ஏதாவது இருக்கக் கூடுமா? இஸ்ரவேலர்கள் தங்கள் விசுவாச குறைபாட்டினால் வனாந்திரத்தில் கழித்த காலமானது, இயேசுவின் புறக்கணிப்பு மற்றும் சிலுவையிலறைபடுதலுக்கும் யூத தேசத்திற்கும்

இடையேயுள்ள கால இடைவெளிக்கு சாத்தியமான இணையாக இருக்கக் கூடும்.

எருசலேமின் வீழ்ச்சியும் பலரை கொன்றழித்தலும் கி.பி. 70 தில் நிகழ்ந்தது. எபிரெய நிருபத்தின் ஆசிரியர் பழைய முறைமையானது அழிவின் விளிம்பிலிருப்பதாக சுட்டுகிறார் (8:13ஐ காண்க). தேவாலயம் இனியும் இருக்காது மற்றும் பலிகள் முடிவுறும் என்று கூறுகிறார். சந்தேகத்திற்கு இடமின்றி இதன் ஆசிரியர் மத்தேயு 24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21 லுள்ள கர்த்தரின் முன்னறிவிப்பால் வழிநடத்தப்பட்டார். இதன் பின்னர் எருசலேமின் அழிவைக் குறித்த (எழுதப்படாத) தீர்க்கதரிசனங்கள் பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்பட்டது என்று கூறுவது வெறும் யூகத்தின் அடிப்பையிலானதாக மட்டுமே இருக்கிறது.

**என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி** (வசனம் 10). அவர்கள் தேவனுடைய தெய்வீக வல்லமையை மீண்டும் மீண்டுமாக பார்த்திருந்ததாக கர்த்தர் கூறினார், ஆனாலும் அவர்கள் அவருடைய “வழியை” அறியவில்லை (ஏசாயா 55:9). உண்மையில், அவர்கள் தேவனை விசுவாசிப்பதில் செயல்பாடற்றிருத்தல் எவ்வளவு வெறுக்கத்தக்கதாக இருக்கிறது என்ற சத்தியத்தை அறிவதை தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் ஆபிரகாம் “காணாதிருந்தும்” கண்டிருந்தார் (எபி. 11:13), இவர்கள் தேவனுடைய வல்லமை செயல் விளக்கப்படுத்தப்பட்டிருப்பதை கண்டனர், ஆனால் அவர்களுடைய சுத்திகரிப்பிற்கும் பரிசுத்தத்திற்குமான தேவனுடைய சித்தத்தை கிரகித்துக் கொள்ளவில்லை. தேவனைக் குறித்த அறிவின் குறைபாடு காரணமாக ஏற்பட்ட இஸ்ரவேலின் பாவத்தை ஓசியா கண்டனம் செய்தார் (ஓசியா 4:1-6).

**வசனம் 11.** இங்கு “ஆகையால்” என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை, ஆனால் அது சட்டப்பூர்வமாகக்கப்பட்டிருக்கிறது. “ஆகவே தேவனே ஆணையிட்டார்” கானான் தேசத்தின் **இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்காதபடி** தேவன் தம்முடைய **கோபத்தில் ஆணையிட்டார்** (காண்க எண். 14:22-30). தேவன் தம்முடைய கோபத்தில் நியாயமுள்ளவராக இருந்தார், ஏனெனில் அது இம்மைக்குரிய கோபமாக இல்லாமல், சட்டப்பூர்வமாக இருந்தது. அவர் அவர்களுடைய பாவத்திற்காக தண்டிக்கையில், அவருடைய நியாயத்தீர்ப்பானது நியாயமானதாகவும், நேர்மையானதாகவும் மற்றும் அவருடைய நீதியின் சட்டத்திற்கு உட்பட்டதாகவும் இருக்கிறதென்று நாம் உறுதிகொள்ள முடியும். அவர்களுடைய பாவத்தின் விளைவை அவர்களுக்கு வலியுறுத்தும்படிக்கு அவர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதில்லை என்று “ஆணையிட்டார்.”

தேவன் வெளிப்படையாகவே முழு நாற்பது ஆண்டு கால வனாந்திர அலைதலில் இஸ்ரவேலரின் தொடர்ச்சியான முரட்டாட்டத்தைக்

குறித்து தேவன் கோபம் கொண்டார்.[13] ஒரு மனிதன் அல்லது ஒரு தேசம் பாவத்தை விட்டு தப்பிக்க வாய்ப்பு இருக்கையில் முரட்டாட்டமாக வாழும்போது, தேவன் தவறு செய்துவிட்டார் என்று ஒருவரும் குற்றஞ் சொல்ல முடியாது. எகிப்தின் அடிமைத்தனத்திற்கு இஸ்ரவேலர் திரும்ப விரும்பினது முட்டாள்தனமானதாக இருந்தது, ஏனெனில் அவர்கள் வனாந்திரத்தில் தேவனை ஆராதிக்க விடுதலையாக இருந்தனர். ஒருவேளை நாம் ஆபிரகாமின் பிள்ளைகளைப் போல தேவனுடைய கடிந்து கொள்ளுதலுக்கு நம்முடைய இருதயத்தை கடினப்படுத்துவோமாகில், நாம் அவருடைய கோபத்தைத் தூண்டி அவருடைய நியாயத்தீர்ப்பை சந்திப்போம்.

இஸ்ரவேலரின் தோல்விக்கான காரணம் (3:12-19)

**12சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான
அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும்
இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். 13உங்களில்
ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்
போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும்
ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். 14நாம் ஆரம்பத்திலே கொண்ட
நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப்
பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில்
பங்குள்ளவர்களாயிருப்போம். 15இன்று அவருடைய சத்தத்தைக்
கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள்
இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே.
16கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால்
எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்களல்லவா?
17மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்?
பாவஞ்செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள்
வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே. 18பின்னும், என்னுடைய
இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக்குறித்து
ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக்குறித்தல்லவா? 19ஆதலால்,
அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்
போனார்களென்று பார்க்கிறோம்.**

இதன் ஆசிரியர் தன்னுடைய புத்திமதியை தொடருகையில், அவர் இந்த கிறிஸ்தவர்களை தங்களுடைய விசுவாசத்தை வலுவானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் வைத்துக் கொள்ளும்படிக்கு வலியுறுத்தினார். விசுவாச வீழ்ச்சியானது அழிவிற்குள்ளாக வழிநடத்துமென எச்சரித்தார்.

3:12-19ல் அவருடைய ஒட்டுமொத்த செய்தியானது நான்கு கடிந்து கொள்ளுதலின் சிறு பகுதிகளாக பிரிக்கப்படக் கூடும். அவர்

தன்னுடைய வாசகர்கள் பாவத்தின் படுகுழிக்குள் விழுவதை தவிர்க்கும்படியாக வலியுறுத்துகிறார் மற்றும் உற்சாகப்படுத்துகிறார்.

**வசனம் 12.** முதலில் அவர் **கவனமாக இரு** (βλέπω, *ப்ளெபோ*) கூறுகிறார். "கவனமாக இருக்க" அல்லது "எச்சரிக்கையாக இருக்க" (NKJV) வலியுறுத்துவது, இந்த நிருபமானது இறையியல் உடன்படிக்கையை விட மேலானது, இது ஒரு அவசர பிரசங்கம் என்று காட்டுகிறது. ஒவ்வொரு உபதேச தலைப்பும் கடிந்து கொள்ளுதலோடு சமன்படுத்தப்படுகிறது. இந்த சங்கதியில் கண்டிப்பான வடிவானது அவருடைய பொறுப்பின் சிக்கலான இயல்பைக் காட்டுகிறது.

வேவுபார்த்தவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு சென்று திரும்பின காதேஸ் பர்சேனயாவின் சம்பவத்தை (எண். 14:28-30) (எபி. 3:7-11ல் மேற்கோளிட்டப்படி) பரிசுத்த ஆவியானவர் சங்கீதம் 95:7-11ல் குறிப்பிடுகிறார். இந்த நிகழ்வில் சத்தத்திற்கு கீழ்ப்படியும்படிக்கும், இன்றைய நாட்களில் நடைமுறைப்படுத்தும்படிக்கும் கூறப்பட்டுள்ள பல எச்சரிக்கைகளை நாம் காண்கிறோம். முதலாவதாக, கிறிஸ்தவர்கள் விழுந்து போகும் அபாயத்திலிருக்கிறார்கள் - நாம் கிருபையைவிட்டு வீழ்ச்சியடையக் கூடும். இரண்டாவதாக, இந்த ஆபத்து அவ்விசுவாசத்தினால் வருகிறது. விசுவாசத்திலிருந்து வீழ்ச்சியடைவதென்பது சில செயல்களை வெறும் மனதளவில் புறக்கணிப்பது மட்டும் குறிப்பிடுவது கிடையாது. வெளிப்படையாக ஒருவர் விசுவாசத்தின் மூலக் கூறுகளை கொண்டிருந்தும், விசுவாசத்திலிருந்து விழுந்து போவதைத் தவிர்க்க இயலாதவர்களாக போதியபெலனில்லாதவர்களாக இருக்கக் கூடும்.

எபிரெயரில் விளக்கப்பட்டிருக்கிற "விசுவாசமானது" தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற எதிர்பார்த்து காத்திருத்தலை குறிப்பிடுகிறது (11:13). இந்த விசுவாசம் அழுத்தங்களின் கீழ் "பின்னால் சுருங்கிப்போகாது" (10:38ஐ காணவும்). இது இருதய உணர்வுகளையும், மற்றும் சத்தியத்தை அறிவோடு ஏற்றுக் கொள்ளுதலையும் உள்ளடக்கியுள்ளது (11:1). வசனம் 12ல் கூறப்பட்டுள்ள அவிசுவாசமானது விசுவாசிப்பதற்கு வேண்டுமென்றே மறுப்பதாகும்.[14]

அவிசுவாசமானது கடின **இருதயத்திற்கு** நேராக வழிநடத்துகிறது. புதிய ஏற்பாட்டில் இருதயமானது மனம் அல்லது அறிவு ஆகியவற்றையும் எண்ணங்கள், சித்தம், மற்றும் உணர்வுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது (காண்க மத். 22:34-40). இருதயத்தை பாதுகாக்க விடுக்கும் இந்த ஆசிரியரின் வேண்டுகோளானது "இயேசு கிறிஸ்துவை கவனிக்க வேண்டும்" என்ற அவசர அழைப்போடு அல்லது அவரைக் குறித்து தீவிரமாக யோசிக்க வேண்டுமென்று" 3:1ல் தொடங்கியது.

அவிசுவாசம் இருதயத்தில் ***தீமையாக*** மாறுகிறது. அவிசுவாசி கெட்டவராக மாத்திரமில்லாமல், அவர் "*தீமையாகவும்*" (πονηρός,

*போனெரோஸ்*) இருக்கிறார். ஏனெனில் ஒருவர் தீமையை செய்ய விரும்புகையில், அவருடைய இருதயமானது பாவத்தினால் வியாதிப்படுகிறது, அவிசுவாசமும் பெறுகுகிறது. இது அவர் கெட்டவராக பிறந்ததின் காரணமாக அல்ல மற்றும் முற்றிலும் அழிந்து போனதில் பிறந்ததினால் முன்னேற்றமானது ஒருபோதும் கீழிறங்குவதில்லை. "மனிதன் பாவியாக பிறந்ததினால் பாவம் செய்கிறான்" என்று கல்வினிஸம் கூறுகிறது. ஆனால் வசனம் 12 ஆனது ஒரு மனிதன் தன்னுடைய அவிசுவாசத்தினால் தீமையை தெரிந்து கொள்வதாகவும், அந்த விசுவாசமற்ற பண்பில் தொடர்ந்திருப்பதால் இன்னும் தீயவனாகிறார் என்றும் பிரகடனப்படுத்துகிறது.

நாம் இவைகள் நமக்கு நேராதபடிக்கு "கவனமாக இருக்க" எச்சரிக்கைப்படுத்தப்பட்டிருக்கிறோம். நமக்கு உதவி செய்யக் கூடாதபடிக்கு நாம் அவிசுவாசியாக பிறக்கவில்லை. ஒருவேளை கிறிஸ்தவர்கள் கூட எச்சரிக்கையாக இல்லாவிட்டால் இந்த நிலையை வளர்த்துக் கொண்டு, **ஜீவனுள்ள தேவனை விட்டு விலகிப்போகக்கூடும்**. "விலகிப்போகுதல்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தையானது, பவுல் இஸ்ரவேலரின் தேவதூஷணத்தையும், விசுவாசிப்பதற்கு மறுப்பதையும் குறிப்பிட பவுல் ரோமர் 11:20, 23ல் பயன்படுத்துகிறார்.

**வசனம் 13.** விலகிப்போகுதலாகிய அழிவின் முடிவை தவிர்க்க, கிறிஸ்தவர்கள் இன்று என்னப்படுமளவும் **நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல்** அவசியமாக இருக்கிறது. இந்த வசனமானது எபிரெயர் 10:25 க்கு விளக்கவுரையாக செயல்படுகிறது. அங்கு விவாதிக்கப்பட்டிருக்கிற தேறுதலானது ஒருவேளை விலகிச் செல்கிற ஒருவருக்கு தினந்தோறும் அவசியப்படுகிறதாக இருக்கிறது, ஆனால் இது நம் அனைவருக்கும் உதவியானதாக இருக்கிறது. நமக்கு தருணம் வாய்க்கும்போது நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம், ஏனெனில் இது "இன்னும் அதிகமாக கூடுகிறதற்கு உற்சாகப்படுத்துவதற்கு பதிலாக" ஒவ்வொருவரையும் உண்மையில் நிலைத்திருக்க வைக்கிறதை இணைத்திருக்கிறது. நாம் பார்க்கப்போகிறபடி 10:25 ஆனது "இன்னும் அதிகமாக தேற்றுவதற்காக ஒன்று கூடுவது" என்று பொருள்படுத்துகிறது.

ஆபத்தானது மிகவும் கடுமையாக மாறிவிட்டபடியால், அதிக உற்சாகப்படுத்துதல் தேவைப்படுகிறது. இந்த அவசரமானது இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், என்று அழுத்தம் தரப்பட்டிருக்கிறது. ஆக ஒரு ஆத்துமாவின் எதிர்காலமானது ஒருவர் இன்றைக்கு என்ன செய்கிறார் என்பதை சார்ந்திருக்கிறது. யூத கிறிஸ்தவர்களின் மீது வெளியிலிருந்த யூதர்களின் அழுத்தமானது அவர்களின் விசுவாசத்தை மயக்குகிற வேண்டுகோளாகவும்,

கிறிஸ்துவை விட்டு யூத மதத்திற்கு திரும்பி அதை பின்பற்ற சோதிப்பதற்கு ஏதுவாகவும் இருந்தது.

எனவே, பவுல் கலாத்தியர் 6:1, 2ல் வலியுறுத்தினபடி, நாம் "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, [இவ்விதமாக கிறிஸ்துவின்] பிரமாணத்தை நிறைவேற்ற [வேண்டியவர்களாக இருக்கிறோம்]." ஒரு தவறு செய்கிற சகோதரனை இரட்சித்தால் உண்மையில் நாம் "ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிக்கிறோம்" (யாக். 5:19, 20), இப்படி குறிப்பிடுவது அநேகமாக ஒருவருடைய சரீரத்தை கல்லறையிலிருந்து காப்பாற்றுவது என்று பொருள்கொள்ளாது. மாறாக இதன் ஆசிரியர் நித்திய இழப்பை ஏற்படுத்தும் மரணத்தை உள்ளடக்கி பேசுகிறார். இந்த வழியில் உதவி செய்ய தவறுவோமெனில், கிறிஸ்துவிற்குள்ளான ஒரு சகோதரன் **பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகக்கூடும்**.

பாவம் வஞ்சனை நிறைந்தது ஏனெனில் இது மகிழ்ச்சி என்ற போர்வையில் வருகிறது. பாவமானது அது விடுவிக்கக் கூடியதை விட அதிகமாக வாக்குப்பண்ணக் கூடிய தகுதியுடையதாக இருக்கிறது. இது குடிகாரர்கள், போதை வஸ்துவிற்கு அடிமையானவர்கள், மற்றும் சாதாரணமான மகிழ்ச்சியை தேடுகிறவர்கள் மூலம் சான்றுப்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவிற்கு அப்பாற்பட்டு நிலையான சந்தோஷம் கிடைக்காது. பாவத்தின் சம்பளம் மரணமாக மட்டுமிராமல், அது அந்த பழக்கங்களில் ஈடுபடுகின்றவர்களை அடிமைப்படுத்தியும் விடுகின்றது.

"ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுதல்" என்ற ஆபத்தானது 12 ஆம் வசனத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் பரிந்துரைக்கப்பட்ட உபதேசங்களை விட்டுவிடுதலானது கிறிஸ்துவை விட்டுப் பிரிதல் மட்டுமல்லாது தேவனை விட்டும் பிரிதலாகும். ஆகையால் கிறிஸ்துவிற்குள்ளான ஒருவருடைய வாழ்வானது ஒரு தெய்வீக வாழ்விற்கு தேவையானவற்றிற்கு அவர் விசுவாசிப்பதோடு கட்டி இணைத்துவிடுகிறது. அவர்களுடைய உணர்வில் மனசாட்சியில் சூடுண்டவர்களாக மாறிவிட்டவர்களுக்கு, பவுல் இவ்வாறு கூறுகிறார் நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை (எபே. 4:19, 20). ஒருவர் "கிறிஸ்துவை கற்றுக்கொள்கையில்," அவர் எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக் கொண்டு தன்னைத்தானே உணர்வுகளுக்குள் அழிந்துபோகாமல் காத்துக்கொள்கிறார், இது எபேசியர் 4ல் சான்றுப்படுத்தப்படுகிறது. நாம் கிறிஸ்துவை எப்படி கற்றுக் கொள்கிறோமோ அதுவே நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை தீர்மானிக்கிறது.

சிலர் இப்படி கூறியிருந்தார்கள், "நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதல்ல, ஆனால் கிறிஸ்துவுடன் தொடர்பு கொள்ளுதலே

வெளிப்படையாக இருக்கிறது" நீங்கள் கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவை எவ்வளவு காலம் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்கள் கிரியைகள் பொருட்படுத்துவது கிடையாது அல்லது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதல்ல நீங்கள் அதை எப்படி எண்ணுகிறீர்கள் என்பதே சங்கதியாக இருக்கிறது. நம்முடைய வார்த்தைகள் நம்முடைய உள்ளான மனிதனை காட்டுவதுபோல, நாம் என்ன செய்கிறோம் என்பதை விட நம்முடைய இருதயத்தில் இருப்பவைகளுக்கு சக்தி வாய்ந்த அறிகுறியாக இருக்கிறது. அதுவே நாம் "ஒவ்வொரு பொறுப்பற்ற வார்த்தைகளுக்கும்" (மத். 12:36, 37) எதற்கு "கணக்கு கொடுக்க" அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை விவரிக்கிறது. ஆனால் நம்முடைய இந்த வசனம் நாம் யாராக இருக்கிறோமோ அப்படியே செய்கிறோம் என்று வெளிப்படுத்துகிறது, ஒருவேளை நாம் கிறிஸ்துவிற்கு முரண்பட்டு செய்வோமானால், நாம் அவரை கைவிட்டு விட்டு, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகிவிடுகிறோம். ஒருவர் தான் யார் என்பதையும், தான் எதை செய்கிறார் என்பதையும் பிரித்துப்பார்க்க முடியாது. இப்படிப்பட்ட கற்பனையான யோசனையானது சாதுர்யமானதாக காணப்படும் ஆனால் இதற்கு வேதாகமத்தில் சான்றுகளில்லை. கிறிஸ்துவை அறிதலிலிருந்து (2 கொரி. 5:16) எப்படி வாழ வேண்டுமென்ற அவருடைய போதனைகளை வேறு பிரிக்க முடியாது.

இதுவரைக்கும் எபிரெயரில் இரண்டு எச்சரிக்கைகள் பார்க்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக அலட்சியத்தை தெரிவிக்கிற விலகிப் போகுதலின் ஆபத்தை நாம் கவனித்தோம் (2:1-4). இரண்டாம் ஆபத்தானது விசுவாச குறைவு மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகளாகும் (3:12, 13).[15] எபிரெயர்களின் முற்பிதாக்கள் எதிர்ப்பை மிகைப்படுத்தி முன்னெடுத்து, அவர்களுக்கு தெளிவாக கிடைக்கப்பெற்ற தேவனுடைய வல்லமையை அலட்சியப்படுத்தினார்கள். இப்படி செய்வதன் மூலம், அவர்கள் தங்களுக்கு வாக்குப்பண்ணின வெகுமதியை இழந்துபோனார்கள். அவர்களுடைய விசுவாச குறைவானது கீழ்ப்படிதலுக்கு நேராகவும் அவர்களுடைய சொந்த அழிவிற்கு நேராகவும் நடத்தியது.

**வசனங்கள் 14, 15. கிறிஸ்துவில் பங்குள்ளவர்களாக** இருப்போம் (வசனம் 14). நாம் உண்மையில் கிறிஸ்துவில் "பங்கு" கொள்கிறோம் (NIV; RSV; ESV), அல்லது அவருடைய "பங்காளிகளாக மாறிவிட்டோம்" (NRSV; ISV). பரிசுத்தவான்களாக, ஞானஸ்நானத்தில் அவரோடு ஒன்றாகி ஆவிக்குரிய விதத்தில் இரட்சகரோடு இணைக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 6:3). நாம் அசைக்கக் கூடாத கிறிஸ்துவினுடைய இராஜ்ஜியத்தின பெரும் ஆசீர்வாதங்களில் நாம் பங்குதாரர்களாக மாறினோம் (எபி. 12:28). இந்த நோக்கத்தை நாம் அடைந்தோமானால், நாம் ஆவிக்குரியவர்களாக இருக்கிறோம் என்றும்

அதைப்பற்றியே பேசுவோம் என்றும் 1 கொரிந்தியர் 1:10ல் கூறப்பட்டிருக்கிற கட்டளைக்கு கீழ்ப்படிந்திருப்போம்.

அப்போஸ்தலருக்கான மற்றும் நமக்கான இயேசுவின் ஜெபத்தில், "நம்மில் ஒருவராக" அதாவது தேவனிலும் கிறிஸ்துவிலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கிறிஸ்தவர்களுக்கான இலட்சியத்தை வெளிப்படுத்தினார் (யோவான் 17:20, 21). இந்த மத உலகிலுள்ள பிரிவினைகள் அனைத்தும் சபையானது வேதவசனத்தை அணுகுதல் சரியானதாக இல்லை என்று நிரூபிக்கிறது. நாம் உபதேச வேறுபாடுகளை புறக்கணித்து, "அற்பமான காரியங்களை" கண்ணோக்காமல் ஒன்றிணைய வேண்டுமென்ற கோணத்தில் அவர்கள் வாதிடுகின்றனர். இயேசு தம்முடைய ஜெபத்தில் கண்ட ஒரு விதமான ஐக்கியம் இது தானா? பிரிவினைகள் வேதத்திற்கு இணையாகவும் கூடுதலாகவும் ஏறபடுத்திக் கொள்வதினால் பொதுவாக பிரிவினைகள் வருவதற்கு காரணமாக இருக்கிறது. வேதத்தின் அடிப்படையில் மாத்திரமே நாம் ஒன்றிணைந்து, கிறிஸ்துவின் முழு பங்காளர்களாக இருக்க முடியும்.

நாம் இன்னமும் பாடுகளின் நிலையில் தான் இருக்கிறோம். உறுதியாக கூறுவதென்றால் நாம் "கிறிஸ்துவின் பங்காளிகள்" என்று அர்த்தப்படுத்துகிற அனைத்தையும் இறுதியாக பெற்றுக் கொள்வோம், ஆனால் நாம் **உறுதியாக இருக்க வேண்டும்**. சுவிசேஷத்தில் நிலைத்திருப்பவர்கள், உறுதியாக பற்றிக்கொண்டிருப்பவர்கள், மற்றும் வீணில் விசுவாசிக்காதவர்களை சுவிசேஷமானது இரட்சிக்கிறது என்று பவுல் உத்தரவாதம் தருகிறார் (1 கொரி. 15:1, 2). "வீணாக" விசுவாசிப்பதானது ஒருவர் தன்னுடைய விசுவாசத்தை விட்டுவிடுதல் அல்லது முடிவு வரை பற்றிக் கொள்ளாமலிருத்தல் என்று பொருள்படுத்துகிறது. நாம் கிறிஸ்துவிற்குள்ளான ஐக்கியத்தை அலட்சியப்படுத்துதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் மூலம் தேவனை விட்டுவிலகி போகக்கூடும் (காண்க 2:1; 3:12, 13). நாம் கண்டிப்பாக "பற்றிக் கொண்டிருக்க வேண்டும்" அல்லது கிரீடத்தை இழக்க வேண்டும் (வெளி. 3:11). இது யாரோ ஒருவர் நம்முடைய கிரீடத்தை எடுத்துக் கொள்ளக் கூடும் என்பதை இது சுட்டுகிறது.

நாம் எதை "உறுதியாக பற்றிக் கொள்ள வேண்டும்"? ஒருவர் இதைக் காட்டி பரிதாபம் பெறாமல் இருப்பதற்கு இது வெறும் மதத்தின் தொழில் அல்ல. இது கட்சிக்காகவோ அல்லது பிரிவிற்காகவோ இருக்கின்ற வைராக்கியமல்ல. ஒருவர் கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் குறித்த நன்மையை குறித்தல்லாமல், தன்னுடைய நிலையை குறித்து மட்டுமே அக்கறை கொண்ட ஒரு பரிசேயராக இதைப் போன்ற ஒரு வைராக்கியத்தை வெளிப்படுத்தக்கூடும். ஆனால் இது நேர்மையாகாது, ஏனெனில் ஒருவர் தேவனுக்கு அர்ப்பணிப்பில்லாமல் தன்னுடைய

வணிக சம்பந்தமாக மட்டும் நேர்மையானவராக இருக்கக் கூடும். சிலர் நியாயத்தீர்ப்பு நாளில் ஒருவேளை அவர்கள் அவர்களை தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் நடத்தின தவறான விசுவாசத்தில் உண்மையாக இருந்ததினால் தேவனிடம் வாதாடக்கூடும், மேலும் அவர் அவர்களுக்கு நான் உங்களை ஒருபோதும் அறியேன் என்று கூறுவார் (மத். 7:21-23).

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய இருதயத்தை காத்துக்கொள்வதிலும் தேவனோடு ஐக்கியம் கொள்வதிலும், வேத வாசிப்பிலும், தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் கொண்டுள்ள அன்பில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். நாம் நம்முடைய உணர்ச்சிகளை அடக்கி ஆராதனைகளில் ஒழுங்காக பங்குகொள்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் உள்ளான மனிதனை சார்ந்த கடமைகளை மட்டுமல்லாமல், பொதுவான கடமைகளையும் பாதுகாக்க வேண்டும். நாம்; உலகத்தின் தன்மைகளையும், ஒழுக்க சீர்கேட்டையும் மற்றும் நேர்மையின்மையையும் தவிர்க்க போதிக்கப்பட்டிருக்கிறோம். “உலகப்பிரகாரமான கிறிஸ்தவன்” என்பதைப் போன்ற ஒன்று கிடையாது, ஒரு குள்ளமும் உயரமுமான மனிதன் ஒருவர் இருக்க முடியாது. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பைப் போன்று ஒருவர் இரகசிய சீஷனாக இருக்கக் கூடும் (யோவான் 19:38), ஆனால் அந்த இரகசியம் நெடு நாள் நிலைத்திருக்க முடியாது.

“இன்றைக்கு” என்று எப்போது வரை அழைக்கப்படுகிறதோ அது வரை நம்முடைய விடா முயற்சி இருக்க வேண்டும் (வசனம் 13), இது வாழ்க்கை இருக்கும் வரை என்று பொருள்படுத்துகிறது (**முடிவுபரியந்தம்**; வசனம் 14) அந்த நாள் வரை தேவனுடைய இரக்கத்திற்கான கதவு திறந்திருக்கிறது. நம்முடைய இருதயம் கடினத்தை வளர்த்துக் கொள்ளாதபடிக்கும், மாறுபடாதபடிக்கும் நாம் ஒரு நிலையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இஸ்ரவேலருக்கு வனாந்திரத்தில் நடந்தவற்றைப் போன்று நமக்கு அது நடக்காமல் நாம் அதை தவிர்க்க வேண்டும் (வசனம் 16ஐ காண்க).

**வசனங்கள் 16, 17.** முடிவுபரியந்தம் உண்மையில்லாமல் ஒருவரும் தேவகோபத்திலிருந்து தப்பிக்க இயலாது என்பதை எபிரேய கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இதன் ஆசிரியர் விரும்பினார். இதை நிரூபிக்க, அவர் பெரும் எண்ணிக்கையில் **வனாந்திரத்தில் மரித்தவர்களை** நினைவுபடுத்தினார்.

எல்லாவற்றிற்குப் பிறகு இஸ்ரவேலரின் தேவனுக்கு **கோபமூட்டுதலானது** எவ்வளவு சோககரமானதாக இருக்கிறது! அநேகம் பேர் இழந்துபோனார்கள் - ஒரு கணக்கின்படி[16] அநேகமாக தொண்ணூறு பேர் ஒரு நாளைக்கு மாண்டனர்.

**யாரோடு அவர் கோபம் கொண்டார் … ?** எப்போதும் போல பாவம் செய்தவர்களால் தேவன் துக்கப்படுகிறார். ஆனால் இளம் வாலிபர்கள்

வனாந்திரத்தில் மரணத்தை அனுபவித்தவர்களாக காணப்படாமல் அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும் தேவனுடைய கோபமானது **பாவம் செய்து** விழுந்த முறுமுறுப்பவர்கள் மற்றும் சீர்கெட்டவர்கள் மீது திசைத்திருப்பப்பட்டது (1 கொரி. 10:6-13). தேவனுடைய அன்பின் வழிகாட்டுதல்களை அறிந்து கொள்வதற்கு அவர்கள் அனைத்து வழிகளையும் பெற்றிருந்தும் அவர்கள் அதை கற்றுக் கொள்ளவில்லை. அவர்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் அவர்களுடைய சரீரம் தனிமையான வனாந்திரத்தில் விழுந்தது (எண். 14:22-29).

நம்முடைய பரலோக பிதாவை கவலைக்குள்ளாக்குவது அல்லது கோபப்படுத்துவது ஒரு சோகத்திற்குரிய செயலாக இருக்கிறது, இந்த செயலுக்கான விளைவுகள் நிச்சயமாக நமக்கு கொடுக்கப்படும். நம்முடைய பாவத்தால் பரிசுத்த ஆவியானவரையும் கூட நாம் துக்கப்படுத்தக் கூடும் (காண்க எபே. 4:30). பன்னிரு வேவுகாரரில் பத்துப் பேருக்கு நடந்ததுப்போல விசுவாசமற்ற இஸ்ரவேலர்கள் உடனடி மரணத்திற்கு தகுதி வாய்ந்தவர்களாக இருந்தனர் (எண். 14:36-38), ஆனால் அந்த வனாந்திரத்தில் சஞ்சரித்த **நாற்பது ஆண்டுகளில்** சிலரை இயற்கையாக மரிக்க தேவன் அனுமதித்தார். ஒட்டு மொத்த அழிவிலிருந்து இவர்களை காப்பாற்றினது மோசேயின் ஜெபமாக இருந்தது (எண். 14:13-19). இஸ்ரவேலின் தவறுகளிலிருந்து நாம் கண்டிப்பாக ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

**வசனங்கள் 18, 19.** வசனம் 18 மீண்டும் ஒருமுறை சங்கீதம் 95:11ஐ குறிப்பிடுகிறது, இது 3:11ல் மேற்கோளிடப்பட்டிருக்கிறது. **இஸ்ரவேலர்கள் கானானிற்குள் பிரவேசிக்கமாட்டார்கள்** என்று தேவன் உபாகமம் 1:34, 35ல் ஆணையிட்டார். இஸ்ரவேலரை கானானை விட்டு தூரப்படுத்திய விசுவாச குறைபாடாகிய அதே பாவம், நம்மையும் பரலோகத்தை விட்டு தூரப்படுத்தும். இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு புறப்படும்போதும், வனாந்திரத்தில் வசித்தபோதும் அனுபவித்த அற்புதங்கள் அனைத்தும் யோர்தான் நதியை கடப்பதற்கு முன்னர் அவர்கள் பெற்ற மரண தண்டனையிலிருந்து அவர்களை விலக்கவில்லை. அதேபோன்றே ஒரு பெரும் "அனுபவத்தைப்" பெற்றிருப்பதாக உரிமைகோரும் ஒருவர் அவர் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் வரை பரலோகத்தை சேருவதற்கான எந்த உத்திரவாதத்தையும் பெற்று இருக்கவில்லை.

எபிரெயரில் கூறப்பட்டுள்ள பிரச்சனையின் காரணமென்னவெனில் தேவனிலும் அவருடைய நன்மையிலும் அவர்கள் கொண்டிருந்த விசுவாச குறைபாடாக இருந்தது. நம்பிக்கை குறைபாடே இன்றைய வாழ்வின் பல பிரச்சனைகளுக்கு காரணமாக இருக்கிறது. "ஒரு மனிதன் தேவனிலுள்ள விசுவாசத்தை இழந்து போனால், அவன் புயல் நிறைந்ததும், கற்பாறைகள் உள்ளதும் மற்றும் மணற்திட்டுகளுள்ளதும்,

நங்கூரத்தை பாய்ச்ச பாதுகாப்பற்றதுமான கரையற்ற கடலில் இருக்கிறான்."[17] நம்மை சுற்றியுள்ள மற்றவர்கள் ஒருவேளை இடறலடையக் கூடும், ஆனால் உறுதியான விசுவாசத்தில் நாம் அமைதியாக இருக்க முடியும்.

பண்டைய இஸ்ரவேலர்கள் தேவனுடைய நன்மையின் மீதான விசுவாச குறைபாட்டின் முட்டாள்தனத்தின் விளைவாக அவர்கள் தேவனுடைய **இளைப்பாறுதலில்** பிரவேசிக்கக் கூடாமல் போனது (வசனம் 18) அவர்களுக்கு அது ஒருபோதும் கானானை காணமாட்டார்கள் என்பதை பொருள்படுத்தியது. நமக்கு இதை நடைமுறைப்படுத்துவதெனில் இது நமது இறுதி இளைப்பாறுதலாகிய பரலோகத்தின் பிரவேசத்தைத் தடைச் செய்துவிடுகிறது. நாம் வேதவசனத்தின் அறுதி உண்மைத்தன்மையின் மீது சந்தேகம் கொள்ளக் கூடாது. போனார்களென்று **பார்க்கிறோம்** என்ற சொற்றொடரானது (வசனம் 19) இதன் ஆசிரியர் இப்படி ஒரு காரணத்தைக் கூற தன்னுள்ளே தெளிவான சான்றை வைத்திருப்பதாக யூகிக்கிறார்.[18]

வசனம் 19ல் வருகிற **கீழ்ப்படியாமை** என்ற வார்த்தையானது வசனம் 19ல் வருகிற **அவிசுவாசத்தின் காரணத்தினால்** என்ற வார்த்தைக்கு சமச் சொல்லாக இருக்கிறது. புதிய ஏற்பாடானது கீழ்ப்படிதலை விசுவாசத்தோடும் கீழ்ப்படியாமையை அவிசுவாசத்தோடும் அடிக்கடி சமப்படுத்துகிறது. யோவான் 3:36 "விசுவாசத்தை" "கீழ்ப்படியாமைக்கு நேர்மாறாக" ஏற்படுத்துகிறது. நாம் கீழ்ப்படியவும், "அவருடைய இளைப்பாறுதலை" அடையும்படிக்கு முழு விசுவாசத்துடனும் இருக்க தொடர்ந்து முயற்சிப்போமாக.

## நடைமுறை

### "பரம அழைப்பு" (3:1)

நம்முடைய அழைப்பானது சுவிசேஷத்தின் மூலம் வந்தது, மேலும் அதன் மூலம் நாம்; "கர்த்தராகிய இயேசுவின் மகிமையை" அடைகிறோம் (2 தெச. 2:13, 14). மோசே தேவனுடைய அழைப்பை நேரடியாக பற்றியெரியும் முட்புதரிலிருந்து பெற்றார் (யாத். 3:1-6), ஆனால் நாம் அதைப்போன்ற ஒரு அழைப்பை எதிர்ப்பார்க்கக் கூடாது. அற்புத வெளிப்பாட்டின் காலம் வேத வசனங்கள் முழுமை பெற்றவுடன் முடிவிற்கு வந்துவிட்டது. "தேவனுடைய மனிதன்" போதிப்பதில் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாக்க அனைத்து தேவைகளையும், சித்தங்களையும் வேதம் முழுவதுமாக ஒதுக்கீடு செய்கிறது (2 தீமோ. 3:16, 17).

சுவிசேஷமானது கேள்விப்பட்டு, கவனிக்கப்பட்டு, மற்றும்

கீழ்ப்படிகின்ற விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை கொண்டு வருகிறது (ரோமர் 10:17). நம்முடைய "அழைப்பிற்கு பாத்திரவான்களாக" நாம் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம் (எபே. 4:1). சுவிசேஷ வாழ்வின்படி வாழ தவறுகிறவர்கள் அனைவரும் "தகுதியற்ற வாழ்வை" வாழுகின்றனர். சுவிசேஷமானது பரலோகத்திலிருக்கிற தேவனிடமிருந்து வந்திருக்கிறது, ஆக ஒரு விதத்தில் நாம் பரலோக அழைப்பை பெற்றிருக்கிறோம். எப்படியாயினும் இன்றைக்கு எவரும் பரிசுத்த ஆவியினாலும், பிதாவினாலும் அல்லது இயேசு கிறிஸ்துவினாலும் நேரடியான அழைப்பை பெறுவதில்லை. நமக்கு தேவையான எல்லா எச்சரிப்புகளும், புத்திமதிகளும் தேவ வசனங்களில் இருக்கிறது, நாம் அதற்கு கண்டிப்பாக செவிகொடுக்க வேண்டும். வேத வசனத்திற்கு கவனம் செலுத்தாதது தேவனுடைய அழைப்பிற்கு செவிகளை அடைத்துக் கொள்வது போன்றதாகும்.

**மரணபரியந்தம் உண்மையாக இருத்தல் (3:1)**

கிறிஸ்தவர்களின் உபத்திரவக்காலத்தில் அவர்கள் இராயனை (சீசர்) கர்த்தராக *குரியோஸ் சீசர்* ("Lord Caesar"). ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு விடுதலை சலுகையை அறிவிப்பது ரோம சாம்ராஜ்ஜியத்தின் வழக்கமாக இருந்தது. ஒரு புறஜாதி ஆசாரியன் அவர்களுடைய அறை ஓரமாக நடந்து சென்று "ஒரு சிட்டிகை தூபவர்க்கத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தராகிய இராயன் மேல் விசுவாசம் வைக்கிறேன் என்று ஆணையிட்டால் நீங்கள் விடுதலையாவீர்கள் என்று சொல்லக் கூடும்." அதற்கு அவர்களில் பெரும்பாலானோர் "குரியோஸ் கிறிஸ்து" என்று பதிலளித்திருக்கக் கூடும். இந்த வெளிப்படையான சிறிய பழக்கத்திற்காக கொடுக்கப்பட்ட சோதனையானது மகத்தானதாக இருந்தது. ஒருவர் "கர்த்தராகிய இயேசுவே இன்னமும் என்னுடைய ஆண்டவராக இருக்கிறார், ஆனால் என்னுடைய வாயினால் மட்டுமே இராயனை அங்கீகரிக்கிறேன்" என்று சொல்லக் கூடும். ஆனால் இதற்கு முரண்பட்டு விசுவாசம் அல்லது அறிக்கையிடுதல் ஆகியவை உண்மையாக இருக்க வேண்டும் வெளியரங்கமான அறிக்கையும், இருதயத்தில் இருப்பதும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும்.

இந்த யூத கிறிஸ்தவர்கள் "பரிசுத்த சகோதரர்கள்" என்று கடிந்துக் கொள்ளப்படுதலையும் யூதமதத்திற்கு திரும்ப வேண்டும் என்ற அழுத்தத்தையும் சமமாக சந்தித்தனர். அநேகமாக அவர்கள் அதைப்போன்ற ஒரு தெரிவு கொடுக்கப்பட்டிருந்தனர். குறைந்த பட்சம் அவர்கள் அவர்களுடைய வாழ்வானது பேராபத்தில் இருப்பதை உணர்ந்திருக்க வேண்டும். இதன் ஆசிரியர் அவர்களுக்கு "நாம் அறிக்கையிடுகிற பிரதான ஆசாரியரான" இயேசு அவர் என்னவாக இருக்கிறார் என்று அவரை அனுமதிக்க மரித்தார் என்று அவர்களுக்கு

நினைவூட்டினார். நிச்சயமாக இது அவர்களை தேவைப்பட்டால் மரணபரியந்தம் அவருடைய முன்மாதிரியை பின்பற்றும்படிக்கு உற்சாகப்படுத்தியிருக்கக் கூடும்.

உண்மையாகவே அவர்கள் ஒருவேளை கிறிஸ்துவிற்கு உண்மையாக இல்லாமல் போனால் மரணத்துக்கேதுவான பெரும் பாடுகளை சந்தித்திருக்கக் கூடும். கி.பி. 66ல் கலகம் தொடங்கின பிறகு ரோம படைகள் எருசலேமை நெருங்கும்போது மத்தேயு 24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21 ஆகியவற்றின் அடையாளங்கள் நிகழத் தொடங்கியது. அர்ப்பணிக்கப்பட்ட எருசலேமில் காணப்பட்ட படைகளின் சுருக்கமான காட்சியானது தேவனுடைய விடுதலையின் அறிகுறியாக இருக்கும் என்ற நினைப்பில், யூதர்கள் பட்டணத்திலோ அல்லது பட்டணத்திற்கு அருகிலோ இருக்க வேண்டியதாக இருந்தது. உண்மையான கிறிஸ்தவர்கள் எதிரானதை அறிந்திருந்தனர். “அழைக்கப்பட்டவர்களுக்கான நாட்கள்” “குறுகியதாக” இருக்கிறது (மத். 24:22) என்று இயேசு கூறினார். ரோம படைகளின் தாக்குதலின் நிறுத்தமானது அந்த பட்டணமானது அழிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தப்பியோடுவதற்கான தருணத்தைத் தந்தது.

தருணங்கள் வந்து போகும். ஒருவேளை கர்த்தருடைய வருகையில் நாம் உண்மையற்றவர்களாக காணப்பட்டால், மீண்டும் அந்த கூட்டத்தில் மற்றவர்கள் இணைவதற்கும் மீட்கப்பட்டவர்களோடு மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கும் இது மிகவும் தாமதமான ஒன்றாக இருக்கும். பழைய முறையில் எவ்விதமான சிறப்பு காணப்பட்டிருந்தாலும், எருசலேமிலிருந்து துரத்துண்ட கிறிஸ்தவர்கள் அதை கிறிஸ்துவின் கணக்கில் வைக்க வேண்டுமே ஒழிய மோசேயின் கணக்கில் வைக்கக் கூடாது.

**“தம்மை ஏற்படுத்தினவருக்கு” (3:2)**

ஏற்படுத்தினவர் என்ற வார்த்தை “உண்டாக்கப்பட்டவர்” ποιέω (*பொயியோ*) என்று பொருள்படுத்தக் கூடும். நான்காம் நூற்றாண்டை சேர்ந்த ஏரியர்கள் என்ற ஒரு பிரிவினர், இந்த வார்த்தையை பிடித்துக் கொண்டு இதை “உருவாக்கப்பட்டவர்” என்று மொழியாக்கம் செய்து, இயேசு “சிருஷ்டிக்கப்பட்டவர்” என்றும் அவர் நித்திய தெய்வீகத்தை உடையவர் அல்லவென்றும் கூறுகின்றனர். அது சரியான எழுத்துப்பூர்வ மொழியாக்கம் போல காணப்படுகின்றது. பண்டைய விமர்சகர்கள் கிறிஸ்துவின் மனித்தன்மைக்கு சரியான நடைமுறைப்படுத்தினார்களேயொழிய தெய்வீகத்தன்மைக்கு நடைமுறைப்படுத்தவில்லை (காண்க யோவான் 1:1-3). சிருஷ்டிக்கும் பணியில் இயேசு பங்கு பெற்றபடியால் (யோவான் 1:3) அவர் வெளிப்படையாகவே அவர் ஒரு சிருஷ்டியாக இருக்க முடியாது. இது கிறிஸ்துவின் முழு தெய்வீகத்தை மறுத்த ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த

தத்துவஞானியாகிய சொசினஸ் அவர்களுடைய போதனையை புறந்தள்ளுகிறது. மேலும் இது இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் ஆகவே அவர் எப்போதும் பிதாவிற்கு கீழானவராக இருக்கிறார் என்ற ஏரியர்களின் போதனையை புறந்தள்ளுகிறது.

நிச்சயமாகவே, கிறிஸ்துவிற்கென்று ஒரு சரீரம் "ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது," அப்படியில்லையெனில் அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்திருக்க முடியாது (எபி. 10:5). இந்த தெய்வீக குமாரனானவர் மரணத்திற்கு கீழ்ப்பட்ட வடிவம் எடுக்காமல் இருந்திருந்தால் நமக்காக மரித்திருக்க முடியாது. இதன் காரணமாக, அவர் நம்முடைய வலிகள் மற்றும் உடல் நலிவுகள் ஆகிய அனைத்திலும் பங்கு கொள்கிறார் என்பதை அறிய அவைகள் அனைத்தையும் அவர் அனுபவித்தார் (2:14). நாமும் கூட "அவருடைய பரிசுத்தத்தில் பங்கு கொள்கிறோம்" (12:10).

### "ஒவ்வொரு வீடும் யாரோ ஒருவரால் கட்டப்படுகிறது" (3:4)

முதல் காரணத்தின் கொள்கையானது "ஒவ்வொரு வீடும் யாரோ ஒருவரால் கட்டப்படுகிறது" என்ற கருத்தை இந்த சொற்றொடரானது தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வார்த்தை தானாகவே நடைமுறையில் வந்திருக்க முடியாது அல்லது எந்த மனிதனாலும் வந்திருக்க முடியாது. மனிதன் தற்செயலாக உருவாக்கப்பட்டான் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்கிறவர்கள் அநேக பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஜீவராசிகள் தானாகவே உருவாக்கப்படுவதை குறித்த கணித மேதைகளின் கணக்குகள் சாத்தியமற்றது என காட்டுகிறது. ஆகவே, ஏதோ "ஒரு கட்டிடக்காரர்" நம்மையும் உலகத்தையும் உருவாக்கினார். கோர்னல் பல்கலை கழகத்தில் ஒரு வானவியலாளரான கார்ல் சாகன் அவர்கள் உலகத்திற்கு அப்பால் ஏதுவும் இல்லை - அதாவது இந்த காண்கின்ற உலகில் தேவன் ஒருவர் இருப்பதற்கு சான்றுகளில்லை என்று நம்பினார்கள். பல புரட்சியாளர்களைப் போன்று மனிதன் அறிவில் சிறந்தவன், எல்லா உயிரினத்தை விடவும் அறிவுமிக்கவன் என்று யோசித்தவர்களில் அவரும் ஒரு மனிதாபிமானி. நம்முடைய சூரிய குடும்பத்திற்கு அப்பாற்பட்ட படைப்புகளை குறித்த அவருடைய மற்ற கற்பனை தூண்டல்கள் மிகவும் அறிவு நிறைந்தவைகள். அவைகள் எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது! சாகன் அவர்கள் இந்த உலகத்தின் வடிவமைப்புகளையும், மேலும் ஒருவேளை அவர் தன் சரீரத்தை பார்த்து, தற்செயலான விளைவுகளாக இல்லாத மனிதனுக்குள்ளிருக்கிற சிக்கலானவைகளில் தேவனைப் பற்றியவைகளைக் கண்டிருக்கக் கூடும். ஒருவர் சிருஷ்டிக் கர்த்தரின் மீது விசுவாசம் வைக்க சான்றுகளனைத்தும் அவரை சூழ்ந்திருக்கிறது.

**"… உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில்" (3:6)**

ஒருவேளை ஒரு நபர் தேவனுடைய கிருபையை விட்டு விலகி விட்டால், அது அவர் அவர் ஒருபோதும் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை நிரூபிக்கிறதா? கிருபையை விட்டு விழுகின்ற ஒரு நபர் கிறிஸ்துவிடம் ஒருபோதும் உண்மையாக மனமாற்றத்தை அடையத் தொடங்கவில்லை மற்றும் இரட்சிப்படையும் வாய்ப்பையும் பெறவில்லை என்று கூறுவதற்கு பல விசித்திரமான முடிவுகள் தேவைப்படுகிறது: "இந்த உலகத்தின் அசுத்தங்களுக்கு" ஒருபோதும் தப்பிக்காத ஒருவர். பேதுரு குறிப்பிடுவதுப் போன்று மீண்டும் முதலிடத்தில் சிக்கிக் கொள்ளவும் "மேற்கொள்ளவும்" முடியாது (2 பேதுரு 2:20-22). அங்கு மீண்டும் விலகுதலுக்கு இடமே கிடையாது, ஏனெனில் அவர் இந்த உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பித்துக்கொள்ளவே இல்லை. 3:12ல் கூறப்பட்டுள்ள "விலகுதலானது" இங்கு பயன்பாட்டிற்கு அறிவற்றதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நபர் பாவ மாசுப்பாடுகளிலிருந்து தப்பிப்பது போன்று காணப்பட்டு, விழுவதுபோன்று காணப்பட்டிருக்கக் கூடும், ஆனால் தப்பித்ததைப் பற்றி இங்கு கூறினார்! ஒரு உறுதியற்ற இரட்சிப்பானது சிறிதளவு ஆறுதலை தரக் கூடும்.

"பரிசுத்தவான்களின் பாதுகாப்பைக்" குறித்த உபதேசமானது (ஒரு முறை இரட்சிப்படைந்தது, எப்போதும் இரட்சிப்படைந்தது) 6 ஆம் வசனத்தின் நிபந்தனை சொற்றொடரை தேவையற்றதாக்கிவிடும். உண்மையாகவே, சிலர் இப்படியாக பதிலளிக்கக் கூடும், "நம்முடைய புதிய பிறப்பின் அனுபவமானது நம்முடைய இரட்சிப்பின் சான்றாக இருக்கிறது." என்னுடைய மாணவர்களுக்கு நான் அடிக்கடி கூறுவதுண்டு, "உங்கள் இரட்சிப்பை உறுதியானதென்று நீங்கள் உணருவீர்களென்றால், அந்த உணர்வைக் கொண்டிருப்பதற்கு அதுவே ஒரு நிச்சயமான சான்றாக இருக்கிறது! நீங்கள் கொண்டிருக்கிறதெல்லாம் அது மட்டுமேயாகும்!" நாம் தற்போது நம்முடைய இரட்சிப்பைக் குறித்து உறுதியாக இருக்க முடியும், ஆனால் நம்முடைய ஆவிக்குரிய முதிர்ச்சியில் நாம் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம் (2 பேதுரு 1:5-11). உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில் நித்திய ஜீவனின் முழுமையான நிஜத்தை நாம் பெற முடியும் (வசனம் 6). இந்த இடைப்பட்ட காலத்தில் நாம் நித்திய ஜீவனின் நம்பிக்கையோடு இருக்கிறோம் (தீத்து 1:2). தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீதான நம்முடைய நம்பிக்கையானது, எதிர் வரும் வாழ்வின் மீதான உறுதியை தருகிறது. இந்த நம்பிக்கையைத் தான் தன் வாசகர்கள் வீசி எறிந்து விடுவார்களோ என்று இதன் ஆசிரியர் பயப்பட்டார் (10:23; 6:11). நாம் இந்த முழுமையான நம்பிக்கையின் உறுதியை உணர்வதற்கு நாம் "முடிவுபரியந்தம்" விடாமுயற்சியுடன் இருப்பது அவசியமாகும்.

"நாம் தேவனை விட்டு விலகிவிட்டால், நாம் ஒருபோதும் உண்மையாக இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை" என்று அது சான்றுப்படுத்துகிறது என்ற கருத்திற்கு, இயேசு இதைப்போன்ற ஒரு உபதேசத்தைப் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை என்று யோவான் 15:1-6 காட்டுகிறது. அந்த வசனங்கள் வெட்டப்பட்டு அக்கினியில் போடப்பட்ட ஒரு "திராட்சைச் செடியை" பற்றி பேசுகிறது. "செடியில் இருந்த" காட்சியானது ஒரு மனிதன் கிறிஸ்துவிற்குள் இல்லாவிட்டால், உண்மையான மனமாற்றம் இல்லாவிட்டால், மற்றும் உண்மையான கிறிஸ்தவராக இல்லாவிட்டால் அர்த்தமற்றுப் போனதாக இருக்கிறது. எப்படியிருந்தாலும், கனியற்ற கிறிஸ்தவர்களும் இழந்து போகக் கூடும்! "விசுவாசத்தை விட்டு விலகுதல் சாத்தியமற்றது" என்பதை ஆதரிப்பவர்கள் யோவான் தன்னுடைய வசனத்தில் கூறாத "அவர் திராட்சைச் செடியில் காணப்படுகிறவராக மட்டும் இருக்கிறார்" என்று கூறுகிறார்கள். சிலர் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு மிகுந்த அழுத்தத்தைத் தந்து, எந்த நிபந்தனையும் இணைக்கப்பட்டிராதபடி பேசி, மனிதனுடைய வீழ்ச்சியை மறந்து விடுகின்றனர். இதன் மற்றொரு உச்சமான வலியுறுத்தமானது கிறிஸ்தவர்களை இரட்சிப்பில் தொடர்ந்து பாதுகாப்பதற்கு எவ்விதமான தெய்வீக வல்லமையையும் மறுக்கும் நிலைக்கு சென்று மனிதனுடைய பெலவீனத்தை வலியுறுத்துகிறார்கள். கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது (1 பேதுரு 1:5) என்று பேதுரு விளக்கினார். அந்த விசுவாசத்தை நிலை நாட்டாமல் நாம் தற்போதும் கூட நித்திய ஜீவன் மீதான நமது பிடிமானத்தை இழந்துவிடுகிறோம். நாம் நம்பிக்கையுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகளாக தொடருவோம் என்றால் நாம் கிறிஸ்துவிற்குள் பாதுகாப்பாக இருக்கிறோம். யோவான் 5:24 போன்ற நாம் "நித்திய ஜீவனை" பெற்றிருக்கிறோம் என்று கூறுகிற வசனப்பகுதிகள் "விசுவாசிக்கிறோம்" என்பதற்கு கிரேக்க நிகழ்காலத்தை பயன்படுத்துகிறது, அது நிகழ்காலத்தைக் குறிப்பிட்டு தொடர்ச்சியான செயலை வெளிப்படுத்துகிறது. நம்முடைய விசுவாசம் தொடரும்வரை நாம் பாதுகாப்பாக தொடருகிறோம். இரட்சகருடைய கரத்திலிருந்து பறித்துக் கொள்ளக் கூடாதவர்கள் அவரைப் பின்பற்றுகிற ஆடுகளாக இருக்கிறார்கள் (நிகழ்கால செயலில் சுட்டுகிறதாகவும் இருக்கிறது; யோவான் 10:27, 28). நாம் இடறலடையாதபடிக்கு 2 பேதுரு 1:5-11ல் நமக்கு ஆவிக்குரிய வளர்ச்சியும் கிருபைகளில் கூட்டுதலும் அவசியப்படுகிறது! வசனத்தின் உண்மையான ஊழியர்களாக, விசுவாசத்தை பாதுகாப்பதின் மனிதனுடைய பொறுப்புணர்வையும், தேவனுடைய தெய்வீக உதவியையும் குறித்து நாம் கண்டிப்பாக

போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"ஒரு முறை இரட்சிக்கப்பட்டபின் நாம் ஒருபோதும் விழுந்து போக முடியாது" என்று போதிக்கிறவர்கள், வசனங்களிலிருக்கிற வெளிப்படையான சொற்றொடர்களை புறந்தள்ள ஓடுகிறார்கள். எடுத்துக்காட்டாக, "சிலர் கிருபையை விட்டு விலகிப்போனதாக" கலாத்தியர் 5:4 கூறுகிறது. வேதப் பகுதியின் வெளிப்படையான பொருளை எப்போதெல்லாம் ஒரு உபதேசம் மீறுகிறதோ அது உண்மையாக இருக்க முடியாது! பிலிப் எட்ஜ்கும்ப் ஹக்ஸ் அவர்கள் "ஆனால் ஒரு மனிதனுடைய வாழ்க்கையாக இருக்கிற விசுவாசமானது தான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிற தன்னை சோதிக்கிற அவருடைய வாழ்வின் தரத்தால் முரண்படுகிறது என்று பொருள்படுத்துவதில்லை [2 கொரி. 13:5]"[20] என்று கூறினார். ஒருவர் "தற்காலத்தில் விசுவாசத்தில்" இருக்கிறாரா என்று ஒருவர் தன்னைத் தானே கண்டிப்பாக சோதித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் பொருள்படுத்தினார். பவுல் தன்னுடைய நிருபத்தை எழுதும்போது விசுவாசத்திலிருந்த கொரிந்துவிலிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதினார் (1 கொரி. 1:2; 2 கொரி. 1:1). ஆனால் இந்த சகோதரர்கள் ஒருபோதும் கிறிஸ்துவிடம் வரவில்லை என்று அவர் பொருள்படுத்தவில்லை. அவர் யாரையாவது அல்லது அனைவரையும் "பரிசுத்தவான்கள்" என்ற பரிசுத்த பட்டத்தை கொடுப்பதின் மூலம் தவறாக எண்ணிக் கொண்டாரா? ஒருவேளை அவர்கள் ஒருபோதும் விலக முடியாது என்று இருக்கக் கூடுமானால், அவர் எதற்கு "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள்" என்று கூறுகிறார் (2 கொரி. 13:5)? "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." என்று அவர்கள் எதற்கு எச்சரிக்கப்பட்டார்கள் (1 கொரி. 10:12)?

### தற்போது ஆவியானவர் எப்படி பேசுகிறார் (3:7-11)

தம்முடைய சொந்த வார்த்தையின் மூலமாகவே ஆவியானவர் கிரியை செய்கிறார் என்று நாம் தெளிவாக பார்க்கிறோம். "ஆவியானவர் கூறுகிறபடி" (வசனம் 7) என்று நிகழ் காலத்தில் கூறியிருப்பதானது, அவர் இன்றும்; தம்முடைய வார்த்தையை கொண்டு பேசுகிறார் என்று காட்டுகிறது. "இன்று" என்ற எச்சரிப்பிற்கு நிகழ்காலத்தில் குறிப்பிடுவது பலத்தை சேர்க்கிறது.

யாரோ ஒருவர் சுவிசேஷத்தை கேட்டு, அதினால் ஆழ்ந்த தாக்குதலுக்குட்பட்டும், அவர் கீழ்ப்படிய மறுக்கிறார் என்பதே இங்கு அடிக்கடி காணப்படுகிற சங்கதியாக இருக்கிறது. பின்வரும் ஆண்டுகளில் அவர் சுவிசேஷத்திற்கு மறுமொழியளிப்பது அதிக கடினமானதாக இருக்கும். கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியை

ஒருவேளை ஒருவர் வணங்கா கழுத்துள்ளவராக புறக்கணிப்பாரெனில், இந்த உலக வாழ்வில் ஒரு நாளில் அவர் திரும்பும் நிலைக்கு வர மாட்டார் (எபி. 10:26). "உங்கள் இருதயங்களை கடினப்படுத்த வேண்டாம்" என்பதே இங்கு கூறப்படுகிற வலியுறுத்தலாக இருக்கிறது (வசனம் 8). சுவிசேஷத்தின் எச்சரிக்கையை புறக்கணிப்பதினால் தேவனுடைய வார்த்தையை எதிர்க்கவும், பாவத்தில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டே இருப்பதற்கும் நாம் நம்முடைய இருதயத்தை வேண்டுமென்றே கடினப்படுத்துகிறோம்.

இங்கே சங்கீதம் 95ல் மேற்கோளிட்டிருக்கிறதென்னவென்றால் எபிரெயருக்கு அவர்களுடைய உண்மையற்ற முன்னோர்கள் வாழ்ந்தது போன்று வாழக் கூடாதென கடுமையான எச்சரிக்கையாக கொடுக்கப்பட்டு எழுதப்படும்போது அகவுணர்வுள்ளதாகவும், அவர்களிடம் கொடுக்கப்படும் வரை அகவுணர்வுள்ளதாகவும் இருந்தது. ஆவியானவர் இன்னமும் வசனத்தின் மூலம் பேசிக்கொண்டும், கிரியை செய்து கொண்டும் இருக்கிறார் என்று புதிய ஏற்பாடு காட்டுகிறது. வசனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி ஒருவர் உள்நோக்கத்தோடு ஆவியானவருக்கு செவி கொடுக்கும்போது, தேவனுடைய செய்தியின் அர்த்தங்களை கிரகித்துக் கொள்வதற்கான அனைத்து உதவியையும் பெற்றுக் கொள்கிறார். ஸ்தேவானுடைய பிரசங்கத்தை வெறுத்து ஒதுக்குகையில் யூத தலைவர்கள் பரிசுத்த ஆவியானவரை எதிர்த்தனர் (அப். 7:51). வெளிப்படுத்தல் 2 மற்றும் 3 அதிகாரங்கள் "சபைகளுக்கு ஆவியானவர் கூறுவதை கேளுங்கள்" என்று அதன் வாசகர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது. அப்போது அது உண்மையாக இருந்ததுபோன்று, இப்போதும் அது உண்மையாக இருக்கிறது, ஆக நாம் எழுதப்பட்டிருப்பதற்கு செவி கொடுக்க வேண்டியது அவசியமாகிறது (வெளி. 2:7, 11, 17, 29; 3:6, 13, 22). பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலால் கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளைகள் அனைத்தும் சபையின் அனைத்து தலைமுறையினருக்கும் அவசியமானதாக இருக்கிறது. ஒவ்வொரு சபைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற செய்தியானது அப்போது இருந்த சபைகளின் நன்மைகளுக்காக கொடுக்கப்பட்டதுப் போல வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு நிருபத்தை தற்காலத்தில் வாசிப்போருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர், அவரால் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் எழுதப்பட்ட வார்த்தையின் மூலம் பேசுகிறார், அதை நாம் இன்னமும் கேட்டு, புரிந்து கொண்டு, மற்றும் கீழ்ப்படியக்கூடும். நாம் சத்தியத்தை அறிய விரும்பும்போது அதைச் செய்வதற்கு வேறெந்த விசேஷமான உதவியும் அவசியமில்லை. ஒருவேளை நாம் ஞானியாக விரும்பினால், கர்த்தருடைய சித்தம் என்னவென்று நாம் புரிந்து கொள்வோம் (எபே. 5:17); அதைப் புரிந்து கொள்வது ஒரு கட்டளையாகும்! "உங்கள்

இருதயத்தை கடினப்படுத்தாதிருங்கள்" என்ற கட்டளை (வசனம் 8) அடிக்கடி மீறப்படுகிறது. "நாங்கள் வேதத்தை சாதாரணமாக புரிந்து கொள்ள முடியவில்லை" என்று மக்கள் கூறுவதுண்டு, அது அப்படியல்ல, அவர்கள் வசனம் சொல்வதைச் செய்ய விரும்புவதில்லை, ஆக அவர்கள்; அதின் அர்த்தத்தை கிரகித்துக்கொள்ள முயற்சி செய்வதில்லை, அவர்கள் இன்னமும் அதைச் செய்ய விரும்பவில்லை! அறியாமை அறியாமையை பிறப்பிக்கிறது. நாம் செவிகொடுக்க மறுக்கும்போது, செவிகொடுக்க மிகவும் கால தாமதம் என்று சொல்கிற அளவிற்கு நாம் கொஞ்சம் கொஞ்சமாக கடினப்பட்டு விடுகிறோம். அந்த நேரம் ஆவிக்குரியதல்லாத குப்பைகள் சத்தியத்தின் நறுமணத்தை கொன்று விட்டிருக்கும்.

### "இன்றைக்கு அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்" (3:7-11)

எபிரெயர் 3ல் இன்றைக்கு என்ற வார்த்தையின் மீது திரும்பத் திரும்ப கொடுக்கப்படும் வலியுறுத்தமானது நம்முடைய பிரசங்கத்தில் ஒரு பெரும்தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். "என்னுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய நாளை வரை காத்திரு" என்று தேவன் ஒருபோதும் கட்டளையிடுவது கிடையாது. இன்றைக்கே ஏன் செயல்படுத்த வேண்டும் என்பதை குறிப்பிட ஒரு பட்டியலை அவர் பின்பற்றினார்: (1) பலர் போதிய மட்டும் ஏற்கெனவே காத்திருந்து விட்டோம். (2) நாளை என்று ஒருபோதும் இருக்காது. (3) மனம் மாறுவதற்கும்; கீழ்ப்படிவதற்கும் காலத்தால் அதிகமதிகமாக கடினமாகிப் போகும். (4) தேவன் கீழ்ப்படிதலை தற்போது கட்டளையிட்டிருக்கிறார் (2 கொரி. 6:2). (5) ஒருவரைக் கீழ்ப்படியத் தூண்டுவது காலப்போக்கில் குறைந்து போகும். (6) தாமதமான கீழ்ப்படிதல் நன்மை பயக்காது. (7) கீழ்ப்படிவதற்கு இன்றைய நாளை விட சிறந்த நேரம் வேறெதுவும் இருக்காது.[21]

### அவிசுவாச இருதயத்தின் பொல்லாப்பு (3:12, 13)

ஒரு பொல்லாப்பான இருதயமானது அவிசுவாசத்தினால் உருவாக்கப்படுகிற தேயல்லாமல் சிலர் குறிப்பிடுவதுபோன்று: "பாவ இயல்பால்" உருவாகுவது கிடையாது. தேவன் இருக்கிறார் என்பதற்கான சான்றுகளை மறுப்பதினால் ஒருவர் தன்னைதானே அறிவாளியாக நினைத்துக்கொள்ளக் கூடாது. அவர் அதை அவருடைய இருதயம் பொல்லாப்பால் நிறைந்திருக்கிறப்படியால் அப்படி செய்கிறார், அவர் தேவனிடம் தன்னுடைய இருதயத்தை திருப்பாவிட்டால் மேலும் கீழ் நோக்கி செல்கிறார். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் ஆபாச படங்களில் வசிக்கும்போது அவருடைய தீய எண்ணங்கள் வளருகிறது. ஒருவருடைய இருதயம் பாவத்தினால் இயல்பாகவே அதிகதிகமாக கடினப்பட்டு போகிறது. விலகுவதின்

செயல்முறையானது இப்படியாக விவரிக்கப்படுகிறது:

> வசனம் 12 மற்றும் 13 ஆகியவை புரிந்துணர்வு புத்திச் சொல்லுதலெனும் நிலையான பெலப்படுத்துதல் இல்லாதப் போது ஒரு மனிதனுடைய ஆழத்திற்குள் நடக்கிற நடைமுறையை ஒன்றாக இணைந்து விவரிக்கிறது- இந்த நடைமுறையானது தொடக்கத்தில் கவனிக்கிற எவருக்கும் காணப்படாது. அவிசுவாசத்தின் கிருமியானது முதலில் வளர அனுமதிக்கப்படுகிறது, அதன் பின்னர் தீமையான மற்றும் தேவனை மீறும் எண்ணங்களும் படர தொடங்குகிறது. படிப்படியாக முழு பண்பும் மாறும் வரை ஒட்டுமொத்த இயல்பையும் ஆட்டிப்படைக்க தொடங்குகிறது … தேவனுக்கான அவருடைய மறுமொழியானது இல்லை என்பதாக இருக்கிறது. அங்கே அவர் ஞானஸ்நானத்தில் வெளிப்படுத்துகிற கீழ்ப்படிதலடங்கிய ஆம் என்பது இனியும் இல்லை.[22]

இதன் விளைவு ἀφίστημι (*அஃபிஸ்டெமி*) “விலகிவிடுதலாகும்,” இது ஜீவனுள்ள தேவனிடமிருந்து வேண்டுமென்றே விலகிப்போகுதலை வெளிப்படுத்துகிறது. இது ஒரு நபர் தான் முன்பு கொண்டிருந்த தன்னுடைய நிலையை விட்டு பிரிகிற தனிப்பட்ட செயலாகிய தேவ தூஷண செயலாகும். இது மீண்டும் திரும்பும் உள்நோக்கமற்று தேவனுக்கும் கிறிஸ்துவிற்கும் எதிரான கலகமாக விலகிவிடும்.

விழுந்து போகிற ஆபத்தில் இருக்கிற மக்களுக்கு சக கிறிஸ்தவர்களால் தினந்தோறும் உற்சாகப்படுத்துதல் அவசியமாகிறது (வசனம் 13). இது முன் எப்போதையும் விட இன்றைய சபைகளில் மிகவும் அதிகமாக தேவைப்படுகிறது. உலகத்திலிருக்கும் நயவஞ்சகமானது, முன்னர் அர்ப்பணிப்போடு இருந்த மக்களை இனி சபையும் கிறிஸ்துவும் அவசியமில்லை என்று மனதை ஏமாற்றி இருதயங்களை கடினப்படுத்துகிறது. இதனால் தாக்கப்பட்டவர்கள் இனியும் சரியாகப் பார்க்க முடியாது, ஏனெனில் இது ஆத்துமாவின் முக்கிய நாளத்தை துண்டித்து விடுகிறது போல இருக்கிறது.[23] ஒருவேளை நாம் உற்சாகப்படுத்துதல், ஐக்கியம் அவசியமில்லை என்று எண்ணிக்கொள்ளலாம், ஆனால் இருதயம் அதற்கு ஏங்குகிறது.

**நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல் (3:13)**

ஸ்தல சபையுடன் இணைப்பில்லாமல் தனிமையான கிறிஸ்தவர்களாக இருக்க விரும்புகிற நபர் அவருடைய கருத்துக்கோணத்திற்கு எபிரெய நிருபத்திலிருந்து எவ்வித சான்றுகளையும் பெற்றிருக்கவில்லை. ஒருவர் முதலில் பார்க்கும் பார்வையை விட, சரீரத்தின் சக அங்கத்தினர்களிடமிருந்து வரும் புத்திமதியானது மிகவும் உதவியாக இருக்கும். பரிசுத்தவான்களோடு தவறாமல் ஆராதிக்கும் நாம் நம்முடைய வாழ்வில் பிறருடைய தாக்கத்தை ஒருவேளை பாராட்டாமலும் இருக்கலாம். ஆனால் யார்

தனிமையாக நிற்கக் கூடும்? "*சரீர* ஆராதனையின்" மதிப்பை இயேசு அறிந்திருந்தார் மேலும் சபையானது அதை தரும்படிக்கு ஏற்படுத்தினார். ஒருவேளை நம்முடைய நண்பர்கள் மற்றும் சக கிறிஸ்தவர்களின் முறையான மற்றும் தொடர்ச்சியான புத்திமதியில்லாமல் "பாவத்தின் வஞ்சகத்தால்"; நாம் கடினப்படக்கூடும்.

புத்திமதி என்ற வார்த்தை παρακαλέω (*பேராக்கிலியோ*) ஒரு வலிவான புத்திமதியை எடுத்துரைக்கிறது. இது ஒரு கிரேக்க இராணுவ தளபதியால் படைகளிலிருக்கிறவர்களை உற்சாகப்படுத்தி தூண்டியெழுப்பும்படிக்கு கொடுக்கப்படுகிற கட்டளையை விவரிக்கிறதாக இருக்கிறது. இந்த விதத்தில் தூக்கியெடுக்கப்பட்டப் பின்னர், இந்த போர்வீரர்கள் இன்னும் தீவிரமாக போர்புரிந்தனர்.

"சக சபை அங்கத்தினர்கள் புத்திமதி இல்லாமலும், கடிந்துக்கொள்ளுதல் இல்லாமலும், வழிவிலகிப்போவதை எவ்வளவு அடிக்கடி காணமுடிகிறது!"[24] நாம் நம்முடைய சகோதர சகோதரிகளுக்கு நாடோறும் கண்டிப்பாக புத்திமதி சொல்ல வேண்டும். தேவனுடன் தொடக்கத்திலிருந்து முடிவை நாம் காண முடியும்; நம்முடைய நிகழ்கால பாடுகள் நாம் பெறப்போகிற வருங்கால மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல (2 கொரி. 4:16-18). தம்மில் "அன்புகூருகிறவர்களுக்கு அவர் சகலமும் நன்மைக்கேதுவாக நடத்துகிறார்" (ரோமர் 8:28). இந்த காரியங்களை அன்றாட வாழ்வில் தலையாய முக்கியமானதாக மனதில் வைத்துக்கொள்ள ஒன்றாக ஆராதிக்கும்போது, அது திருமண முறிவால் முடிவுறுவதற்கு மிக தூரமாக இருக்கிறது. ஒரு தகப்பன் தன் குடும்பத்தை ஆராதிக்கும் சபைக்கு ஒன்று கூடுகிறதற்கு முறையாக கூட்டிக் கொண்டு செல்வாராகில் அவருடைய பிள்ளைகள் கடமைத் தவறினவர்களாக நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படமாட்டார்கள்.

உலத்தில் மிகப் பெரிய ஐக்கியத்துடன் இணைந்த தேவனுடைய வசனத்தின் மீதான தியானமானது விசுவாசத்தின் மூலமாக பாரங்களை எடுத்துப்போடக் கூடியதாக இருக்கிறது. முதல் நூற்றாண்டு யூத கிறிஸ்தவ சீஷர்; ஆபிரகாமிற்குள்ளான தன்னுடைய சகோதரர்களால்; ஒருவேளை உறவை விட்டு துண்டிக்கப்பட்டு அல்லது பெரும் தொல்லைகளால் அச்சுறுத்தப்பட்டிருக்கக் கூடும், ஆனால் அவருடைய முந்தைய விசவாசத்திற்கு மாற்றாக அமைந்திருப்பது விலையேறப்பெற்றதாக இருந்தது.

**கிறிஸ்துவின் பங்காளிகள் (3:14)**

கிறிஸ்துவின் பங்காளிகளாக இருப்பது எவ்வளவு ஆசீர்வாதமானது! ஒருவேளை வசனம் 14 கானது "கிறிஸ்துவுடன்," "கிறிஸ்துவிற்குள்" அல்லது "கிறிஸ்துவுடைய" என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருந்தாலும், இப்படி மொழியாக்கங்களை முக்கியப்படுத்தி

கூறுவது முக்கியத்துவம் குறைந்தாக இருக்கிறது, ஏனெனில் நாம் இயேசுவுடன் மட்டுமே நித்திய மகிமையை பகிர்ந்துக் கொள்ள போகிறோம் என்று ஒவ்வொரு மொழியாக்கங்களும் வெளிப்படுத்துகிறது. இந்த வசனம் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உள்ள ஒரு ஆவிக்குரிய ஐக்கியத்தை எடுத்துரைக்கிறது. சில உபதேச பிரச்சனைகளை அலட்சியம் செய்து அல்லது "வெளித்தோற்ற" அல்லது "முக்கியமற்றதாக" எண்ணப்படுகிறவைகளைக் குறித்து நியாயந்தீர்க்கும்போது ஒரு கேள்வியைக் கேட்க முயற்சிக்கும் வரைக்கும் நாம் கிறிஸ்துவுடன் பங்காளிகளாக இணைக்கப்பட முடியாது. இப்படி யோசிக்கும் விதமானது பணிவு நிறைந்ததாகவும், ஒருவர் எதை தேவனைக் குறித்து தன்னுடைய கருத்தாக விரும்புகிறார் அல்லது எதை தள்ளிவிடுகிறார் என்பதை எடுத்துக்கொள்வதில் நிறைவு பெறுகிறது.

உண்மையான ஒரு ஐக்கியத்தை பெறுவதற்கு அவர் நியமித்த பாதையாகிய கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக நாம் கண்டிப்பாக கிறிஸ்துவிடம் பிரவேசிக்க வேண்டும் (கலா. 3:26, 27). விசுவாசத்தின் அடிப்படை அடித்தளத்தை ஏற்றுக்கொள்வோமென்றால், கிறிஸ்துவுடனும் மற்றும் கிறிஸ்துவிற்குள்ளான நம்முடைய சகோதர சகோதரிகளுடனும் முற்றிலும் ஒன்றாக இருப்பதற்கான வழியில் நன்றாக சென்று கொண்டிருக்கிறோம். நாம் ஒளியில் நடந்தால் மற்றவர்களுடனும் "ஐக்கியமாக" இருப்போம், மேலும் கிறிஸ்துவின் இரத்தம் நம்மை அனைத்து பாவத்திலிருந்தும் சுத்திகரிக்கும் என்று யோவான் சுட்டினார் (1 யோவான் 1:7). ஐக்கியமானது சுத்திகரிப்போடு தொடர்ந்து இணைந்து செல்கிறதில்லையா? நாம் நம்முடைய ஐக்கியத்தை கட்டுப்படுத்துகிறோம், ஆனால் தேவன் அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களை கட்டுப்படுத்துகிறார். அவருக்கு நம்முடைய ஆலோசனை அவசியமற்றதாக இருக்கிறது.

மற்றவர்களை நியாயந்தீர்க்கவும், தேவனுக்கு ஆலோசனை சொல்வதற்கும் நாம் நம்முடைய மனித மனோபாவத்தை கட்டளைகளை எடுத்துக் கொள்ளவும், தெரிவு செய்துகொள்ளவும் அனுமதிக்க வேண்டும். நம்முடைய உறுதியான பிடிமானமானது கிறிஸ்துவின் மேலும் அவருடைய சத்தியத்தின் மேலும் இருக்க வேண்டும், மேலும் நாம் அதை முடிவுபரியந்தம் "உறுதியாக" பற்றிக்கொண்டிருக்க வேண்டும் (வசனம் 14).

### நாம் தேவனை கோபமூட்ட முடியும் (3:16, 17)

"கோபமூட்டுதல்" (παραπικραίνω, *பேராபிக்ரைநோ*) என்ற வார்த்தை "கசப்பான உணர்வுகளை தூண்டிவிடுதல்" அல்லது "அவநம்பிக்கை கொண்ட" என்ற பொருளை தருகிறது. ஆம், நாம் இறுதியில்

கர்த்தருடைய இரக்கத்தை வெளியேற்றிவிடுவோம் மற்றும் ஒருவேளை நாம் அவருடைய வார்த்தையை விட்டு விலகி, நம்முடைய இருதயத்தை கடினப்படுத்துவோமாகில், நீடிய பொறுமையாயிருக்கிற தேவன் மீது அவநம்பிக்கை கொள்வோம். ஒருவர் எபிரெயர் 6:4-6ல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்ற பின்னர் விழுந்துபோவாரென்றால், அவர் தேவனுடைய கோபத்திற்கு பாத்திரவானாக இருக்கிறார். இஸ்ரவேலர் வனாந்திரத்தில் பாவம் செய்தபோது, அவர்கள் விழுந்துபோனார்கள். அவர்களுடைய சவங்கள் சூரிய வெப்பத்தினால் அழுகிப்போனது. பின்னும் தேவன் அவர்களோடு நாற்பது ஆண்டுகள் கோபங்கொண்டிருந்தார், அவருடைய கோபம் சரியாக பாத்திரமுள்ளதாக இருக்கிறது. அவர் தம்முடைய ஆசீர்வாதத்தை அவர்கள் மீது மொழிந்திருந்தார், "கழுகின் செட்டைகளால்" எகிப்திலிருந்து அவர்களை இரட்சித்தார் (யாத். 19:4). அவர் அப்பத்திற்காக மன்னாவையும், இறைச்சிக்காக காடையையும், கன்மலையிலிருந்து தண்ணீரையும், அவரில் விசுவாசம் கொண்டிருந்த ஒரு பெருந்தலைவரையும் அவர்களுக்கு தந்து, அவர்களுக்கு ஒரு தகப்பனைப் போலிருந்தார். மக்கள் அவரை புறந்தள்ளுகையில் அவரால் எப்படி கோபம் கொள்ளாமலிருக்க முடியும்? அவர் உண்மையிலேயே நாற்பதாண்டுகள் அவர்கள் மீது உண்மையாகவே கோபமாக இருந்தார்! ஒருவேளை நாம் தேவனை கோபப்படுத்தியிருந்தால், நம்மை நாமே பரிசோதித்து, வெகு சீக்கிரத்தில் மாற்றிக்கொள்வோமாக.

### கீழ்ப்படியாதவர்களின் அவிசுவாசம் (3:18, 19)

கீழ்ப்படியாமையில் தொடராதவர்கள் தேவ கோபத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இஸ்ரவேலர்கள் தங்கள் பயணத்தை உற்சாகமாக தொடங்கினார்கள், உணவின் மீதான ஆவல் அவர்களை எகிப்தியர்கள் அவர்கள் மீது சுமத்தின கடுமையான மோசடிகளை மறந்து, அதற்கு மாறாக அவர்கள் தங்கள் கடந்த காலத்தில் தங்கள் சொந்த வயிற்றை நன்றாக நிரப்பினதைப் பற்றி யோசித்தனர் (எண். 11:5). தேவனுடைய மக்கள் அவர்களுடைய முந்தைய அடிமைத்தனத்தைக் காட்டிலும், சுகபோகமான பூண்டைப் போன்றவைகளைத் தவறவிட்டிருந்தனர்.

ஒருவேளை நாம் நம்மை மாற்றிக்கொள்ளாத வண்ணம், நம்முடைய பாவங்களில் மிகவும் மனநிறைவாக இருக்கக் கூடும். அநேகமாக நம்மை சுற்றியிருப்பவர்கள் நம்மை மனந்திரும்பும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிய கடினமாக்கக் கூடும். கீழ்ப்படியாமையை தூண்டுகிற எதுவாயினும் அது மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது, இல்லாவிட்டால் தேவ கோபம் நம் மீது வரும்.

கீழ்ப்படிதலே எபிரெயரின் முக்கிய திறவுகோல் சிந்தனையாக

இருக்கிறது. “சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள்” மேல் கடைசிகால கோபாக்கினை வரும் என்று மறு அழைப்பு விடுக்கிறது (2 தெச. 1:7-9). கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே இரட்சிப்பளிக்கப்படுகிறது (எபி. 5:8, 9). வசனம் 18 மற்றும் 19ல் சித்தரிக்கப்பட்டிருப்பது போன்றும், யோவான் 3:36ல் காணப்படுவது போன்றும், அவிசுவாசமும் கீழ்ப்படியாமையும் எபிரெயரில் சமன்படுத்தப்பட்டிருக்கிறது. விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை புதிய ஏற்பாட்டில் அடிக்கடி ஒரே பொருளுடைய சிந்தையாகக் கூறப்பட்டுள்ளது. இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம் அவசியமானதாக இருக்கிறது, “நிபந்தனையற்ற நித்திய பாதுகாப்பு” என்ற சிந்தையானது வேத வசனங்களுக்கு அந்நியமானதாகும்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]மோசே மற்றும் இயேசு ஆகியோருக்கிடையேயுள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் அடங்கிய ஒரு நீண்ட பட்டியல் James Burton Coffman அவர்களின் எபிரெய *Commentary on Hebrews* கொடுக்கப்பட்டுள்ளது (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 67-69. [2]1 தெசலோனிக்கேயர் 5:27ல் சில பிற்கால கையெழுத்துப்பிரதிகள் “பரிசுத்த சகோதரரே” என்ற வார்த்தையை கொண்டிருக்கிறது. KJV மற்றும் NKJV ஆகியவை இந்த வார்த்தையைக் கொண்டிருக்கிறது, ஆனால் சிறந்த மொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தையை கொண்டிராதபடியால், ASV, NASB, NIV மற்றும் RSV ஆகிய மொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தையைத் தவிர்த்திருக்கிறது. [3]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 122. [4]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 127. [5]James Thompson, *The Letter to the Hebrews*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1971), 49. [6]“ஊழியக்காரன்” என்பதற்கான குறிப்பிட்ட கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இது செப்துவஜிந்தில் அடிக்கடி காணப்படுகிறது. θεράπων (*தெரபொன்*) என்ற இந்த வார்த்தையானது அவருடைய மேலானவருக்கு கீழானவர் என்பதை வெளிப்படுத்துகிறது. [7]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 78. [8]Hughes, 139. [9]Thompson, 54. [10]Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 82.

[11]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 84. [12]Thompson, 55. [13]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 109. [14]Thompson, 55-56. [15]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 361. [16]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 97. [17]Albert Barnes, *Notes on the New Testament: Hebrews to Jude* (London: Blackie & Son, 1884-85; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1985), 90. [18]Guthrie, 110. [19]சொல் அமைப்பு NASB, ASV, ISV மற்றும் NRSV யில் உள்ளது போல் ஒன்றுபோல் உள்ளது. NIV யானது “விசுவாசிப்பது” மற்றும் “புறக்கணிப்பது” என்றுக் கூறப்பட்டுள்ளது. [20]Hughes, 139.

[21]Coffman, 70. [22]Gerald F. Hawthorne, “Hebrews,” in *The New International Bible*

*Commentary*, ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986), 1511-12; Hawthorne's comment was based on Johannes Schneider, *The Letter to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 31-32. [23]Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (Moberly, Mo.: Scripture Exposition Books, 1992), 49. [24]Barnes, 85.